28 APR 1998
மாநகராட்சி நூலகம்
யாழ்ப்பாணம்

நல்லூர் நூலகம்

பக்கங்கள் 12

# காலைக்கதிர்

விலை : 8/-

KAALAIKATHIR வாரவெளியீடு

ஒளி 01 திருவள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 04 ஏப்ரல் 17 — 23, 1998 கதிர் 07

அமெரிக்கப் பிரதிநிதி பில் றிச்சர்ட்சன்

# புலிகள் ஆயுதத்தை கைவிட்டு பேச்சில் ஈடுபட வலியுறுத்து

இலங்கையில் நடித்து வரும் இனப்பிரச்சினைக்கு அரசியல தீர்வு காணப்பட வேண்டும். நாட்டின ஒற்றுமை பேணப் டும் அதே சமயத்தில இலங்கை மக்கள் அனைவரதும் நியாயபூர்வமான நலங்களை அங்கீகரிக்கும் விதத்தில் சமகால மோதலகளுக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை அமெரிக்கா ஆதரிக்கின்றது. சமாதான முயற்சிகளுக்கு உதவ அமெரிக்கா விரும்புகின்றது. எனினும மோதலில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புக்களே இதற்கான முன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும், இவ்வாறு கொழும்புக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதி பில் றிச்சாட்சனும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதியமைச்சர் கார்ள் இண்டபொத்துவும் செய்தியாளர்கள மாநாட்டில் பேசும்போது தெரிவித்தனர்.

இச்செய்தியாளர் கூட்ட மாநாட்டில் பில் றிச்சர்ட்சன் மேலும் குறிப்பிடுகையில் சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஒரு சிறந்த அரசியல் பிரமுகர் ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் பயனுடையவையாக அமைந்தன. அரசாங்கத்துடனும நாட்டு மக்களுடனும வளர்ந்துவரும இந்த நட்புறவையிட்டு பெருமையடைகிறோம் போராட்டத்தை எதிர்ப்பதில் அமெரிக்கா தீவிரமாக ஒத்துழைத்து வருகிறது ஜனாதிபதியுடனான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் களைத்திருப்பினும் சாதகமான நிலையில்லை

புலிகள் களைத்துப் போயுள்ளார்கள் ஆனால் எம்மால் அதனைச் சாதகமாகப் பயன்படுத்த முடியாமலுள்ளது. ஏனெனில் கைப்பற்றிய இடங்களைப் பாதுகாக்கக்கூடிய ஆளணி வசதிகள் எம்மிடம் இல்லை.

இவ்வாறு வன்னியில் நடைபெறும் ஜயசிக்குறு நடவடிக்கைக்குப் பொறுப்பான உயர் இராணுவ அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மாங்குளத்தைப் பிடிக்க முடியாமலிருப்பதற்கு காரணம் சுமார் நூறு தற்கொலைப் போராளிகள் உறுதியாக குறுக்கே நிற்பதேயாகும் எனவும் மாங்குளத்தின் இரு பக்கவாட்டிலும் மாங்குளத்தைக் கடந்து சென்று விட்டோம் எனினும் ஊடறுக்க முடியாத எதிர்ப்பை புலிகள் காட்டி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## போர் மூலம் தீர்வு என்பது பகற்கனவாக கருதப்படலாம்

— ஹரி குணதிலக

வடக்கின் ஒரு மூலையில் குந்தியிருந்தவர்களை அங்கிருந்து விரட்டி விட்டதால் வடக்கு கிழக்கு மட்டுமல்ல கொழும்புக்கும் அவர்கள் வந்து விட்டனர்.

சிறிலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் குறிப்பிடுகையில் ;

யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டால் புலிகள் அத்துடன ஒழிந்து விடுவார்கள். தமிழரும் அவர்களைத் தூக்கி எறிந்து விடுவர் என்றே கனவு கண்டோம் ஆனால் நிலைமை வேறு விதமாகவே உள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் புலிகளுக்கு இன்னமும் ஆதரவு உண்டு என்றே தெரிகிறது. போர் மூலம தீர்வு என்பது பகற்கனவு போலவே கருதப்படலாம் எனவும் குறிப்பிட்டார்,

## வடக்கு கிழக்கு யுத்தத்தில் எண்பது வீதம் பூர்த்தி ?

அரச வட்டாரம் தகவல்

வடக்கு கிழக்கில் யுத்தத்தில் 80 சதவீதத்தை படையினர் பூர்த்தி செய்துள்ளனராம். இவ்வாறு சிறிலங்கா அரச வட்டாரங்கள் கூறி வருகின்றன. எனினும் முப்படையினருக்குமான இராணுவத் தளபாடக் கொள்வனவுகள் தொடர்கின்றனவாம்.

இதற்காக முப்படை உயரதிகாரிகள் கடந்த சில மாதங்களாக பல நாடுகளுக்கு அவசர விஜயம் மேற்கொண்டிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இராணுவத்தினருக்கான நவீன ரக இராணுவத் தளபாடக் கொள்வனவிற்காக நான்கிற்கும் மேற்பட்ட குழுக்கள் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், உட்பட பல நாடுகளுக்கும் சென்று வந்துள்ளனராம்.

## பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு

### இலங்கை அரசுக்கு நம்பிக்கையாம்

(ஜெனீவா)

ஜனநாயக ரீதியான பேச்சுவார்த்தைகள் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியும் என்பதில் இலங்கை அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி எச் எம்.ஜி எல் பலியாகார தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில் அரசியல் யாப்பு சீர்திருத்த யோசனைகள் பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலம் ஏற்கப்பட்டு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட முடியும் என்பதில் அரசுக்கு நம்பிக்கையுண்டு எனவும தெரிவிததார்.

அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டு வாக்காளர்கள் புலிகளின அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது ஜனவரி மாதத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களித்தனர் எனவும், இதன் மூலம் ஆயுதப்போராட்ட முறையை மக்கள் நிராகரித்துள்ளனர் எனவும் சுட்டிக் காட்டினார்

### சட்டமா அதிபர் யாழ் வருவார்

சட்டமா அதிபர் சரத் என் சில்வா இம்மாத இறுதிக்குள் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக தெரியவருகிறது. யாழ் மாவட்டத்தில் தற்போது இயங்கும் யாழ்ப்பாணம், ஊர்காவற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் நிலை மாறாது அமைச்சர் சமரவீர உறுதி

(கொழும்பு)

இலங்கை அரசு தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் இந்தியாவின் நிலைப்பாட்டில் புதிய அரசு எந்த மாற்றத்தையும் கொண்டு வராது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தகவல் தபால் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பில் வெளியிடப்படும் வீக் எண்ட் எக்ஸ்பிரஸ் இதழுக்கு வழங்கிய பேட்டியின் போது இத் தகவலைத் தெரிவித்தார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவின் புதிய பிரதமர் வாஜ்பாய் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கல்விக் கொள்கை மாற்றம் சிறந்த விளைவைத் தராது

— சுந்தரம் டிவகலாலா

(யாழ்ப்பாணம்)

இலங்கை, கொரியா போன்ற நாடுகளிலே தான் அரசாங்கங்கள் மாறும் போது கல்விக் கொள்கைகளும், திட்டங்களும் மாறுகின்றன. இது ஆரோக்கியமற்ற விளைவுகளைத் தான் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில எந்தவொரு அரசாங்கமும் கல்விக் கொள்கையை அடிக்கடி மாற்றுவதில்லை. நிலையான அபிவிருத்திக்கு தூர நோக்கு கொண்ட கல்விக் கொள்கையே வேண்டும்.

தீவக பாடசாலைகளின் கல்வி நிலை தொடர்பாக கரம்பொன் சிறி புஸ்ப மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் நா.சுந்தரலிங்கம் கம வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு கல்விக் கோட்ட அதிகாரிகள் மற்றும் தீவக அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நேபாள நாட்டிற்கு ஒரு தடவை செல்லும் வாய்ப்பு கிட்டியது அப்போது அந்நாட்டின் கல்வியமைச்சரை சந்தித்தேன். கஷ்டப் பிரதேசங்களுக்குச் செல்ல ஆசிரியர்கள் விருப்பமில்லை அவர்கள் போக நேர்ந்தாலும் கல்வி கற்பிக்கத் தயங்குகின்றனர். ஆசிரியர்கள் பலரும் கற்பிக்கத் தெரியவில்லை என அந்நாட்டின் கல்வியமைச்சர் குறிப்பிட்டார். இத்தகைய நிலை தீவகப்பாடசாலைகளுக்கும் ஏற்படக் கூடாது எனத் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கு பகுதிக்கு பாண் எடுத்துச்செல்லத் தடை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பாதுகாப்பு காவலரண்களுக்கு அப்பால் பொது மக்கள் பாண் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக ஐ பி. சி வானொலி தனது செய்தியில் தெரிவித்தது. கடந்த புதனன்று ஒலிபரப்பான இச்செய்தியில் மேலும் குறிப்பிடுகையில் பாதுகாப்புக் காவலரண்களுக்கு அப்பால் பாண் எடுத்துச் செல்லப்படக் கூடாது என்றும் படையினர் எச்சரித்துள்ளனராம். இந்த அறிவிப்பு கடந்த பதினோராம் திகதி முதல் அமுல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நட்பு நாடு என்ற வகையில் பிரிட்டனின் ஒத்துழைப்பு குறைவு

லக்ஸ்மன் கதிர்காமர் கவலை

நட்பு நாடு என்ற வகையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பிரிட்டன் அரசு மிகவும் குறைந்தளவு ஒத்துழைப்பையே வழங்கி வருகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார். பிரிட்டனுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அவர் சர்வதேச விவகாரங்களுக்கான ரோயல் நிறுவனத்தில கடந்த புதனன்று உரையாற்றினார். அங்கு அவர்

(12 ஆம் பக்கப் பார்க்க)

# அம்பலத்துரங்கு

— ஊடுருவி



☐ உலகம் கம்பியூட்டர் மயமாகி விரைவான மாற்றங்கள் உள்வாங்கி வருகையில் அத்தகைய மாற்றங்களை நாமும் உள்வாங்கத் துடிப்பது வாஸ்தவம்தான். தவிர அதுதான் நிகழ்ந்தும வருகிறது.

இந்நிலையில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் மனிதனின ஆரம்பம் பற்றி எங்களுடைய புத்திஜீவிகள் சிலர் போதிக்கின்றனராம. ஏன் என்று கேட்டால் முற்போக்கு மாற்றத்திற்காம முற்போக்கு என்பது பின்நோக்கிப் பார்ப்பதல்ல என்றார் நண்பர் ஒருவர்.

☐ போரினால் சிதையுண்டு போன வட பிரதேசத்தை மீள புனர்மாணம் செய்ய வடக்கிற்காக புனர்வாழ்வு புனர்நிர்மாண அதிகாரசபை – RRAN – மும் முரமாக உளளதாம்.

கட்டட திருத்த வேலைக்கு சீமெந்து விநியோகம் செய்கிறதாம எப்படி? வீடு திருத்தக்கூடியது 10 பைக்கற்றும குறைந்தது 2 பைக்கற்றும விநியோகிக்கப்படுகிறதாம, பலதத சிபாரிசுகளின பின்னர்

குடாநாட்டு வீடுகளைத் திருத்த 10 பைக்கற் சீமெந்தை கொண்டு என்ன செய்வது – என்றார் பாதிக்கப்பட்டவர் ஒருவர்.

தவிர சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்ட ஈடும் அரசு கொடுக்கப் போகிறதாம் – அதுவும் ஒரு கிள்ளித் தெளிப்பு தான். ஆனால சீமெந்து விநியோகிக்கப்பட்டிருந்தால் பை ஒன்றுக்கு 200/- படி அதற்குரிய முழுத்தொகை நஷ்ட ஈட்டிலிருந்து கழிக்கப்படும என அதிகார பூர்வ அறிவிப்பும வெளிவந்துள்ளதாம்.

☐ காணாமற் போனவரின் கதை மட்டும் காணாமற் போகாது போல. சர்வதேச மன்னிப்புச் சபை வடக்கில காணாமற் போனவர்கள் குறித்து, விசாரணைகள் நடாத்தி முடிவாக காணாமற் போனவர்கள எவரும் இனித் திரும்ப மாட்டார்கள் எனவும் இதற்கு இலங்கை அரசுப படைகள தான் பொறுப்பு எனவும் அறிக்கை வெளியிட்டது யாவரும் அறிந்தது.

உள்ளூராட்சி அதிகாரங்கள கைப்பற்றிய 'புத்துணர்ச்சி' இனைமும் ஓயாத நேரம. நாமும் மக்களுக்கு 'சேவை' செய்ய வேண்டும என்ற துடிப்பும் ஓயவில்லை. ஏதோ மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என தமிழ் தலைமைகளும துடிதுடித்தபடி!

அந்த வகையில் காணாமற் போனவர்களை விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும என அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது முதத தமிழ்க் கட்சி.

காணாமற் போனவர்களின் உறவுகளின் கண்ணீரில அரசியல் ஒரு தொடர்கதைதான்;

☐ யாழ்ப்பாணத்தில் இருந்து வர்த்தகர் ஒருவர் கொழும்பில் உள்ள பொலிஸ் உயர் அதிகாரியும் நண்பருமான ஒருவருக்கு புதுவருஷம் வாழ்த்துகள் தெரிவித்தார்.

ஏன் வீட்டுக்கு போய் வருஷம் கொண்டாடவில்லை – வர்த்தகர் கேட்டார்.

லீவு இல்லை – என்றார் பொலிஸ் நண்பர்.

ஏன?

புலிகள் எந்நேரமும் எமைத் தாக்கலாம் – பொலிஸார் கூறினார்

என்ன சேர் இப்படிச் சொல்கிறீர்கள்.

நோ. நோ. எங்களுக்கு இரு பிரச்சினை உண்டு. முதலாவது ஆட்பல பற்றாக்குறை. இரண்டாவது (Morale Out) மனோதிடம - இழந்து விட்டோம – என்றார அப்பொலிஸ் அதிகாரி.

☐ யாழ் குடா நாட்டை அரசு படைகள் கைப்பற்றிய பின்பு மாமூல நிலைமை வந்து விட்டதாக அரசு தொடக்கம அரசியலவாதிகள் வரை அலட்டிக் கொளகிறார்கள்

இது எவ்வளவு உண்மையோ, பொய்யோ, அரசு தனது சட்டம ஒழுங்குகள் நிகழ்வதாக காட்டிக்கொள்ள முனைப்புடன் உள்ளது உண்மை தானாம.

ஆனால் குடாநாட்டில் உள்ள நீதி மன்றுகளில் தட்டெழுததாளா இல்லை. ஒழுங்கான தட்டச்சு இயந்திரம இல்லை. எல்லா வற்றையும் விட மேலாக மன்றுக்கு வரும சாட்சிகள், வழக்காளிகள எதிராளிகள் லாச்சி களையே இருக்கைகளாக பாவிக்கின்றார்களாம்.

☐ யாழ்ப்பாணத்தில் இலக்கிய வெளியீட்டு முயற்சிகள் ஏராளம. சந்தோஷம் தரும விடயம்தான். அண்மையில நடைபெற்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவொன்றிக் கலந்து கொண்ட மறுமலர்ச்சி, கலைச்செல்வி, புதுமை, வெள்ளி, அமிர்த கங்கை – என சஞ்சிகைகள் அடுக்கிக்கொண்ட பேச்சாளப் பெருந்தகை ஒருவர், இவற்றிற்கு பிறகு ஆக்கபூர்வமான சஞ்சிகைகளும் சரி புதிய இளம எழுத்தாளர்களும சரி எழவில்லையே என ஆதங்கப்பட்டார்.

இலக்கிய காட்டாற்றை கடந்து வந்த பேச்சாளருக்கு 'வெளிச்சம்' கண்ணில் படவில்லையே! அது பிரசவித்த புதிய இளம் எழுத்தாளர்கள கண்ணிற் படவில்லையே! அது சரி போகட்டும். அந்தக் காலத்து சுடரும் சுடவில்லையா அவருக்கு!

இருப்பும் பிழைப்பும் எதுவரை?

☐ அண்மையில் புறநகர்ப்பகுதியில் ஆபாசப்படம் ஓடிய மினி சினிமா கொட்டகை மீது Raid ஒன்றை முன்னாள் இயக்கமும் இந்நாள் தமிழ்கட்சியுமான ஒன்று நடாத்தி முடித்தாம்.

இந்த Raid இன் பின்னர் உரிமையாள ஆஸ்பத்திரி சென்று வீடு மீண்டு, மீண்டும் மினி சினிமா இயக்குவது வேறு விடயம் போக, இந்த Raid பற்றி சுமார் 70 வயதிற்கும் மேற்பட்டவர் ஒருவர் விமாசனம் வைத்தார்.

'ஈ. பி. டி. பி என்றால் என்ன புளொட் என்றால் என்ன? இவ்வளவு நாளும் எங்கேயோ இருந்து விட்டு இப்ப வந்து நியாயம் கதைக்கினம். வேணும எண்டா பொலிஸ் வரட்டும், - இப்படி நியாயம் பிளந்தார் அந்த வயோதிபர்.

காலம் மாறிப்போச்சு! கவலை எல்லாம் போச்சு!

☐ அண்மையில் யாழ் நகருள் இனம் தெரியாதவர்களால் இனம புரியாத இலக்கு மீது கைக்குண்டு வீசப்பட்டது யாவரும் அறிந்தது.

இந்நேரத்தில் கைக்குண்டு வீச்சாளர் யார் என்பது பற்றிய அந்நகரிலுடைய வாதப்பிரதி வாதம 'சிச்சி, இவங்கள் இல்லை. அவங்கள் தான். இவங்களுக்கு இப்ப - தேவையல்லை – அடிச்சுக் சொன்னார் ஒருவர். 'சீச்சீ, அவங்கள் ஏன் இப்படிச் செய்யுறாங்கள். இவங்கள் தான் செய்தது, குண்டுச்சத்தத்தை பார்க்கவே தெரியுது. வெடிச்ச கிடங்கைப் பார்த்தியா? விசர்க் கதை கதைக்கிற –'

தமக்குத் தெரிந்த இராணுவ விஞ்ஞான கற்பனை கொண்டு அலட்டிக் கொண்டார்கள்

நண்பர் ஒருவர் குமுறினர், நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்து விட்டால். கண்டனம கொள்ளவும் கவலைப்படவும் வேண்டிய விடயம் என்பதற்கு அப்பால் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நிகழாமலிருக்க சகல தரப்பும் சிந்தித்து செயல்பட வேண்டும். அப்பாவிகளின் இரத்தங்களை பத்திரிகையில் படித்துவிட்டு இராணுவ விஞ்ஞானக் கற்பனை கலந்து வீரம் பேசும் வரை இந்நிலைமை தான் தொடரும் என்றார் பக்கத்திலிருந்தவர்.

# சங்கிலியன் படையணியின் எச்சரிக்கை சங்கடப்படுத்தும் கேள்விகள்

- தெற்காசிய நாடுகளுடனான உறவுகளில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறக்க வாஷிங்டன் அக்கறை கொண்டிருக்கிறது. பிராந்தியத்தில் பதற்ற நிலையைத் தணிப்பதில் மத்தியஸ்த பங்கை வகிப்பதில் அமெரிக்கா ஆர்வம் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள புதிய அரசு கடைப்பிடிக்கப் போகும் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக கொழும்பில் ஒருவித மான பதற்ற உணர்வு காணப்படுகின்றது
- கொழும்புக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்த பிரிட்டன் பிரதி வெளிவிவகார அமைச்சர் டெரீக் பற்செட்டின் வருகை திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.
- எதிர்வரும் ஜூலை மாதத்தில் தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் (சார்க்) மாநாடு கொழும்பில் நடத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறாக வெளிவரும் பல தரப்பட்ட செய்திகளும் சர்வதேச அரங்கில் சிறிலங்காவின் பாத்திரத்தைப் புலப்படுத்துவதாகக் கொள்வது மிகையானதாக இருக்க முடியாது. சிறிலங்காவின் முக்கியத்துவம் சர்வதேச அரங்கில் அதிகரிப்பதனால் இனப் பிரச்சினை தொடர்பான கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் மூன்னுரிமைகள் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படலாம். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகள், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் என்பன போன்ற விடயங்கள் பல்வேறு மட்டங்களிலும் பேசப்படக் கூடியவை என்ற சூழல் முளைவிடக்கூடும்.

எனினும் இத்தகைய முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து எழும்பக் கூடிய கேள்விகள் 'அரசுக்கும விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடை பெறுவதற்கான சமிக்ஞை தென்படுவதாக தென்பகுதியில வெளிவருகின்ற செய்திகளில் எதுவித உண்மையுமில்லை' என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பினால் முனை மழுங்கிப் போய் நிற்கின்றன. விடுதலைப் புலிகளின் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் விசு இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார் எனவே பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வை நாடும் போக்கு போராளிகள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை என்றே கருதமுடிகிறது.

இந்தச் சூழ்நிலையில் அண்மையில் கைக்கு கிட்டிய துண்டுப் பிரசுரம் ஒன்றின் வாசகங்களும் எச்சரிக்கை உணர்வை ஊட்டுகின்றன. சங்கிலியன் படையணியின் அரசியல் வெளியீட்டுப் பிரிவு என்ற முத்திரையுடன் அப் பிரசுரம் யாழ்ப்பாண நகரின் பல பகுதிகளிலும் விநியோகிக்கப் பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. அன்பார்ந்த தமிழீழ மக்களே! என விளித்து எழுதப்பட்டுள்ள அப் பிரசுரத்தில் இராணுவ அட்டூழியங்களால் தமிழீழ மக்கள் பட்ட துன்பங்கள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளதோடு இராணுவ அட்டூழியங்கள் நடைபெறாது தடுக்கும் நோக்கில் நெருக்கடிகளை ஏற்படுத்த இருப்பதாகவும், இத்தகைய நெருக்கடிக்குள் சிக்காமல்

**— இர.சகிளி —**

இருக்கும் வழி முறைகளைப் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் படையினருடன் தேவையற்ற தொடர்புகள் கொள்வோர், தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களுக்கு செல்வோர் எனப் பலதரப் பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலான வாசகங்களும் இடம் பெற்றுள்ளன. இதனை உன்னிப்பாக அவதானித்து சரியான வழியில் செயற்படுவீர்களென நினைக்கிறோம் எனவும் அப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சந்தித்து வரும் நெருக்கடிகளில் தலையாயதாகவுள்ளது இராணுவத் தரப்பிலிருந்து கிட்டும் அழுத்தங்கள் என்பது பொருந்தமானதாக இருக்கலாம். எனினும் படையினரின் பிரசன்னம் துளியளவு கூட இல்லாத எழுபதுகளின் ஆரம்பத்திலேயே அரசுக் எதிரான உணர்வுகளின் வெளிப்பாடாக ஆயுதமேந்திய செயற்பாடுகள் முளைவிடத் தொடங்கின என்பது இங்கு எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும் இனப்பிரச்சினையும், இன ரீதியாக ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வும் தமிழ் மக்களிடம் வேரோடியுள்ளதன் வெளிப்படாகவே ஆயுதப் போராட்டம் வளர்ந்தது என்பதையும், போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கினால் இராணுவ நெருக்கடிகளும், அன்றாட அவலங்களும் தலை தூக்கின என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சிறிலங்கா அரசாங்கத்தின் நிர்வாகத்தை நிலைநாட்ட முற்படும் படையினரை இந்த மண்ணிலிருந்து துரத்தியடிப்பது மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டு வந்து விடும் என்ற கருதுகோள் இன்றைய காலத்திலும் இங்கு வாழ்பவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் எனக் கொள்வது பொருத்தமானதாயில்லை.

பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் அன்றாடக் கெடுபிடிகளும், நாளாந்த அவலங்களும் படையினர் மீதான விசனத்தை மக்கள் மத்தியில் முளைவிடச் செய்து வருகின்றது என்பது உண்மையே. ஆயினும் அந்நியப்படையினர், ஆக்கிரமிப்பாளர்கள் என்ற கருதுகோள்கள் மக்கள் மத்தியில் வலுப்பெறுவதாக இல்லை என்பதைக் கவலையுடன் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும், மற்றும் கொண்டாட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டதும் அதில் கலந்து கொண்டவர்களின் மனவுணர்வுகளும் மட்டுமன்றி சாதாரண பொது மக்களின் உணர்வலைகளும் இதையே கோடிட்டுக்காட்டுகின்றன எனலாம். வேலைவாய்ப்பு, நிவாரணம் பெறுதல் முதல் அடிப்படையில் அனைத்துச் செயற்பாடுகளிலும் சிறிலங்காவின் விசுவாசமுள்ள பிரஜைகள் என்ற முத்திரையைக் குத்திக் கொள்ள வேண்டியது இப்போது இங்கு காலத்தின் கட்டாயமாகியுள்ளது. சிறிலங்காவின் ஜனாதிபதி திருமதி சந்திரிகா முன்வைத்துள்ள 'ஒரே நாடு ஒரே மக்கள்' கோஷத்தையிட்டு தமிழ் மக்கள் எவ்வாறு அலட்டிக் கொள்ள வில்லையோ அதேபோலவே 'தமிழீழ மக்கள்' என்ற அழைப்பும் உணர்ச்சியூட்டுவதாக இப்போது இல்லை என்பது மனவருந்தம் தரக் கூடியது எனலாம்.

இத்தகைய சூழலில் தான், அரசாங்க ஊழியர்கள் அரசுக்கு விசுவாசமாகவே செயற்பட வேண்டும். இருவேறு நிர்வாகங்களின் கீழ் செயற்பட எத்தனிக்கக்கூடாது, என்ற யாழ் நகர கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் சுசந்த மென்டிசின் கட்டளை பிறந்துள்ளது. அண்மையில் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபரின் அறையில், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் கருத்து வெளியிட்ட பிரிகேடியர் சுசந்த மென்டிஸ், மிகவும் தெளிவான குரலில் 'தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அரசினால் தடை செய்யப்பட்ட இயக்கமாகும். எனவே அதன் உறுப்பினர்களுடனோ அல்லது இயக்கத்துடனோ ஏதேனும் தொடர்புகள் வைத்துக்கொள்வோர் மீது கடும நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவித்தார். உயர் அதிகாரி ஒருவர் 'வசதியுடையவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது நல்லது. முடியுமாயின் இடமாற்றம் பெற்றுச்செல்வது உகந்தது. இரண்டுக்கும் இயலாதெனின் கைகளைப் பிசைந்து கொள்வதைத் தவிர வேறில்லை; என்று குறிப்பிட்டாராம்.

இதேவேளை உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு அரசினால் வெளியிடப்பட்ட பின்னர் உள்ளூர் தேர்தல் திணைக்களம் தேர்தலை நடத்தத் தயங்கியதால் ஏற்பட்ட நிலைமையைச் சுட்டிக்காட்டிய ஒருவர், யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகவோ, கட்டுத் தாபனத் தலைவர்களாகவோ, திணைக்கள உயர் அதிகாரிகளாகவோ ஏனைய இனத்தவர்கள் நியமனம் பெறமாட்டார்கள் என்பதற்கு ஏதும் உத்தரவாதமில்லை என்றார் அவ்வாறான நிலைமைகள்ஏற்பட்டால் எமது மண்ணிலேயே எமது மக்கள் நிர்வாகரீதியாக பெரும் துன்பங்களுக்கு முகம்கொடுக்க நேரிடும்

# அரசியல் அரங்கம்

அத்துடன் நாட்டின் நிரந்தர அமைதிக்கும், சமாதானத்திற்கும் வழிகோலும் வகையில் 'அரசு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகையால் அரச ஊழியர்கள் பொது மக்களின் நலன் கருதி தமது சேவையைப் பொது மக்களுக்கு வழங்க வேண்டியது கடமையாகும் எனவும தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அரசாங்க என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எவரும் சுட்டிக் காட்ட மாட்டார்களா என்று ஏக்கம் தெரிவித்தார்.

துப்பாக்கிகளின் நிழல்கள் தரும் அச்சத்தாலும், பணிவை எதிர் பார்க்கும் சந்தேகப் பார்வைகளாலும் சங்கடப்படும் மக்களின் உயிர்களுக்கு எவர்தான உத்தரவாதமளிக்க முடியும் என்பதே இன்று எவருக்கும் முன்பாகவுள்ள கேள்வி என்பது மிகையானதல்ல. □

## அமெரிக்காவின் அசட்டை

உலக மக்கள் தொகையில் அமெரிக்கர்கள ஐந்து வீதம். ஆனால் உலகில் உள்ள கார்களில் 50 சதவீதமானவை அமெரிக்கர் வசம் உள்ளன இதனால் ஏற்படும் புகைக்கு சுற்றாடல் மாசடைவதற்கு 50 சதவீதமான பொறுப்பு அமெரிக்காவைச் சார்ந்தது. ஆனால் அமெரிக்கா இது பற்றி அசட்டை செய்துவிட்டு ஏனைய நாடுகளுக்குச் சுற்றுச்சூழல் பற்றி ஆலோசனை வழங்குவது தான் வேடிக்கை.

## யானைகள் இறக்குமதிக்கு அரசாங்கம் நடவடிக்கை

இலங்கையில் இப்போது யானைக்கும தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் எதிர்காலத்தில் யானைகள் பெருமளவில் பங்குபற்றும் பெரஹரா உற்சவம் கூட பாதிக்கப்படலாம் என வனவிலங்குத்துறை துணைத் தலைமை அதிகாரி நந்தன அத்தபத்து தெரிவித்தார்

இத்தட்டுப்பாட்டை நீக்க மூகற் கட்டமாக தாய்லாந்திலிருந்து குறைந்த விலையில் 10 யானைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன நிதி நெருக்கடியில் உள்ள தாய்லாந்தின் நாணயப் பெறுமதி குறைந்த நிலையில் இருப்பதால் யானைகளை அங்கு மலிவாக பெற முடியும் என அவர் குறிப்பிட்டார். இலங்கையில் யானை 80 ஆயிரம் டொலர் வரை விற்கப்படுகின்றன.

காங்கேசன்துறை

# சீமெந்து தொழிற்சாலை திறப்பு அரசாங்கத்தின் தேர்தல் கோஷமா?

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுமா அல்லது திறக்கப்படாதா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, இவ்விவகாரம் அரசியல்வாதிகளின் தேர்தல் கோஷமாக மாத்திரம் பயன்படுத்தப்படுகிறதா என்று சந்தேகிக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர்.

ஆம்! அன்றைய வடபகுதி உள்ளூராட்சி தேர்தலை ஒட்டி நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை விரைவில் திறக்கப்படுமென்றும் அதற்காக 167 மில்லியன்கள் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மட்டத்தில் கூறப்பட்டதும் பத்திரிகைகள் மற்றும் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் இவற்றுக்கு முக்கியம் கொடுத்து செய்தி வெளியிட்டதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலும் முடிந்து மாதங்களும் கடந்துவிட்டன. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை விவகாரத்தில் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதற்கான எந்த விதமான சான்றுகளும் காணப்படவில்லை.

'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகின்றது' என்ற வகையில் அது ஒரு விளையாட்டாக அல்லது பொழுது போக்காக இருக்கலாம்.

ஆனால் சாதாரண தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அது ஒரு ஜீவாதாரப் பிரச்சினை என்பதை மறுப்பதற்கில்லை.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எந்த வித ஊதிய அதிகரிப்பும் இன்றி 1987-ம் ஆண்டு பெற்ற அதே அடிப்படைச் சம்பளத்துடனேயே இன்று வரை உள்ளனர்.

மேற்படி தொழிற்சாலையில் கடமையாற்றிய சுமார் 600 இற்கும் மேற்பட்ட ஊழியர்களில் தற்பொழுது 160 பேர் மாத்திரம் உரும்பிராயில் இயங்கும் கொங்கிறீட் பகுதியில் சேவை செய்கின்றார்கள். இவர்களுக்கு சம்பள அதிகரிப்பும் வழங்கப்படுகின்றது. ஆனால் ஏனைய ஊழியர்கள் எந்தவித ஊதிய அதிகரிப்பும் இன்றி நெருக்கடி நிலைமையிலேயே வாழுகின்றனர்.

1987ம் ஆண்டு ஏனைய துறையினரை விட அதிக ஊதியம் பெற்ற இவ்வூழியர்கள் இன்று மோசமான சூழ்நிலையில் வாழுகின்றனர்.

### தொழிற்சாலை ஊழியரின் கருத்து

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை சாதாரண ஊழியர் ஒருவர் கருத்து இது. நாம் எந்த விதமான ஊதிய அதிகரிப்பும் இன்றி நீண்ட நாட்களாக வாழுகின்றோம். பிற வேலைகளுக்கும் போக முடியாத நிலைமை காணப்படுகிறது. தொழிற்சாலை விரைவில் திறக்கப்பட வேண்டும் அல்லது தொழிற்சாலை மூடப்பட்டு ஊழியர்களின் சம்பளம், சேமிப்பு பணம் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் அல்லா

**நீர்வையூரான்**

விட்டால் நாம் இரண்டும் கெட்டான் நிலையிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும்.

### உயர் அதிகாரியின் கருத்து

தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டி வருகின்றது என்றே எண்ணத் தோன்றுகிறது. ஊழியர்களுக்கான சம்பளம் ஒழுங்காக வழங்கப்படுகின்றது. தொழிற்சாலையை மூடும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதனையே காட்டுவதாக உள்ளது.

இது விடயமாக உயர் அதிகாரி மேலும் தொடர்கையில்; எம்மை பொறுத்தவரையில் மேலிடத்தின் உத்தரவுகளை நிறைவேற்றுவதிலேயே எமது செயற்பாடு அமைந்துள்ளது.

இது விடயமாக உருப்படியான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டியவர்கள் கொழும்பில் செயற்படும் எமது கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளே.

இவ்வதிகாரிகளின் செயற்பாட்டிலேயே தொழிற்சாலையின் முழுச் செயற்பாடும் தங்கி உள்ளது.

ஆனால் நான் அறிந்த வரையில் எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் இத்தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் ஒரேயடியாக சகலருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என உறுதி கூற முடியாது. கட்டம் கட்டமாக வேலை வாய்ப்பு வழங்கப்படும். ஆயினும் அங்கு கடமையாற்றிய சகலருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

இத்தொழிற்சாலையின் பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில்; முதற்கட்டமாக ஜிப்சம் என்ற மூலப்பொருளை இறக்குமதி செய்தே உற்பத்தி மேற்கொள்ளப்படும். பின்னர் எமது மூலவளத்தைப் பயன்படுத்துவது பற்றி தீர்மானிக்கப்படும்.

அது மட்டுமல்ல தொழிற்சாலை சூழல், அதனுடைய பாதுகாப்பு இதர வசதிகள் குறித்தும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள முடியும். 'மனம் உண்டானால் இடம் உண்டு. எதுவும் எமது செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது' என்றார்.

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை மீள ஆரம்பிப்பது குறித்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்; இத்தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் முழுமையான ஆதரவை வழங்க நான் பின்நிற்கமாட்டேன். ஆனால் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் பல்வேறு சங்கடங்கள் உள்ளன.

ஓர் அமைதி நிலை திரும்பும் பட்சத்திலேயே இத்தொழிற்சாலையின் முழுமையான செயற்பாட்டைக் காண முடியும். உதாரணமாக சீமெந்து உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை கொண்டு வருதல், முடிவுப்பொருட்களை ஏனைய இடங்களுக்கு அனுப்புதல், மக்களுடைய குடியிருப்பு வசதிகள், பாதுகாப்பு, மின்சக்தி, போக்குவரத்து, (இலகுவான முறையில் சீமெந்தை சந்தைப்படுத்துவது என்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியம் அல்ல) என்பன போன்ற விடயங்கள் கவனத்தில்கொள்ளப்படவேண்டும்.

### மக்களின் எதிர்பார்ப்பு

மேற்படி தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் பல்வேறு சிக்கல்கள் பிடுங்கல்கள் உள்ளன என்பதும் அத்தடங்கல்கள் இத்தொழிற்சாலை மீள திறப்பதில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கு வலுவான காரணங்கள் என்றாலும் கூட அத்தடைகளை தாண்டி இத்தொழிற்சாலை மீள திறக்கப்படுவதில் அசமந்தப் போக்கு காட்டப்படல் கூடாது என்பதுவே தொழிற்சாலை ஊழியர்களின் எண்ணமாகும்.

மொத்தத்தில் வடபகுதியின் புகழ் பூத்த; எத்தனையோ பேருக்கு வாழ்வு வழங்கிய நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்துவதற்கு உந்து சக்தியாக விளங்கிய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீண்டும் செயற்படும் நாளை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருப்போர் அநேகர் என்பது மிகையானதல்ல. □

## குழந்தைகளுக்கு பவுடர் பூசுவதில் கவனம் தேவை

குழந்தைகளுக்குப் பவுடர் (பேபி பவுடர்) போடுவது பற்றிக் கவனமாக இருக்கும்படி மருத்துவர் குழுவொன்று அண்மையில் தாய்மார்களை எச்சரித்துள்ளது. காற்றுடன் கலந்து சுவாசப்பையை அடையும் பவுடர்களால் கடுமையான சுவாச நோய்கள் ஏற்படுவதாக அவர்கள் ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இந்தப் பவுடர் குழந்தைகளின் மரணத்துக்குக் கூடக் காரணமாய் இருந்துள்ளதாம்.

குளித்த பிறகு குழந்தைகளின் மீது பேபி பவுடரை அப்பும் தாய்மாரும் குழந்தைகளிடம் பவுடர் புட்டியை விளையாடக் கொடுக்கும் பெற்றோர்களும் நம்மத்தியில் ஏராளம்.

குழந்தைகளைக் குளிப்பாட்டிவிட்டு நன்றாகத் துடைத்து விட்டால் போதும் இந்தப் பவுடர்களெல்லாம் அநாவசியமானவை என்று அந்த மருத்துவக் குழு தெரிவித்துள்ளது. குளிக்கப் போய் சேற்றைப் பூசுவதா?

## மூன்றாம் உலக நாடுகளும் உலக மயமாக்கலும்

— விரிவுரையாளர் வி.பி. சிவநாதன்

மூன்றாம் உலக நாடுகளில் சந்தை மயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராள மயப்படுத்தல் சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும். ஏனெனில் உலக மயமாக்கலுக்கு இவை அவசியம்: இவ்வாறு யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.பி. சிவநாதன் தெரிவித்தார். கடந்த திங்களன்று திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில், சமூக விஞ்ஞான கல்வி வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளால் சில அமைப்புக்கள் காட்டப்படுகின்றன. ஐ.எம்.எப் அல்லது உலக வங்கி, அல்லது உலக வர்த்தக நிறுவனம் என்பனவெல்லாம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் கோரிக்கைகளையே பிரதிபலிக்கின்றன. இந்த அடிப்படையில் உலக மயமாக்கலை அபிவிருத்தியடைந்த நாடுகளே வரையறுக்கின்றன, ஏழை நாடுகளுக்கு இவை ஒரு வரப்பிரசாதம் என்ற மாயையை அவர்களே உருவாக்குகின்றனர். வறுமையை ஒழிக்கவும், வேலையின்மையை நீக்கவும், நாடு அபிவிருத்தியடையவும் உலக மயமாக்கலுக்குள் நாடு கொண்டு வரப்பட வேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக உலகெங்கும் இக்கருத்து படிப்படியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது எனினும் கடந்த தசாப்தத்தில் உலகரங்கில் ஒரு அமைப்பு மாற்றம் ஏற்பட்டது. இதன் வழித்தோன்றலாக வரும் விடயத்தையும் நாம் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாட்டின் முதலீட்டுத் தன்மையும் சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அதாவது ஒரு நாட்டில் வெளியிடப்படும் பங்கு இன்னொரு நாட்டில் விற்கப்படலாம் என்ற சூழல் இருக்க வேண்டும். லண்டனில் வெளியிடப்படும் பிணைப்பத்திரங்கள் அமெரிக்கக் கம்பனிகளால் வாங்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும்' ஒரு நாட்டின் சொத்து இன்னுமொரு நாட்டில் விற்கப்படுவது முதலீட்டில் தான் இருக்கிறது. இது முதலீடுகள் மூலம் மீண்டும் காலனித்துவ வாதத்தை ஏற்படுத்துவதாகவும் அமையலாம்.

பல்தேசிய நிறுவனங்கள் எங்கும் வியாபித்து உலகப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் நிலைமை காணப்படுகிறது இந்த நிலைமையிலிருந்து தற்காத்துக்கொள்ள பிராந்திய ரீதியிலான செயற்பாடுகள் ஆரம்பித்தன. அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா என மூன்று பொருளாதார சக்திகள் உலகரங்கில் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கின்றன.

அடுத்து உலக மயமாக்கலுக்குள் செல்வது நன்மையைத் தருகிறதா என்பதையும் பார்க்க வேண்டும். சில நாடுகள் இதனால் நன்மை அடைந்துள்ளன. எனினும் இது நிலை நிறுத்தப்படக்கூடியதா என்பது சந்தேகமே. இந்தியாவுக்கு இது நன்மையைத் தந்துள்ளது. இருந்தும் சோவியத்திலிருந்து பிரிந்த குடியரசுகளில் உலக மயமாக்கல் வறுமையையே தோற்றுவித்துள்ளது. இது உலக மயமாக்கலின் சிக்கலான தன்மையைக் காட்டுகிறது.

சிங்கப்பூர், கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் மூன்றாம் உலக நாடுகளில் சற்றுவளர்ச்சியடைந்துள்ளன. உலக வர்த்தகத்தில் மூன்றாம் உலக நாடுகளின் பங்குகளில் பெரும்பான்மையை இவை கொண்டுள்ளன. ஆனால் 1997-ன் இறுதியில் முதலீட்டுத்தன்மையில் ஏற்பட்ட சரிவு இந்நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் உலக மயமாக்கத்துக்கு உட்பட்டு சற்று மேலோங்கிய நாடுகளே நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்தியைக்கொண்டிருக்க முடியாது என்பது தெளிவாகிறது எனவும் குறிப்பிட்டார். □

# யா. போதனா மருத்துவமனையில் சாதிக்கு ஒரு நீதியாம்

**— சுகாதார தொழிலாளர்கள் குமுறல்**

பிரச்சினைகள் எதுவாயினும் உறங்கிக் கிடந்த யாழ் போதனா வைத்திய சாலை மீண்டும் கலவரப் படத்தொடங்கிவிட்டது. மேசையில் இருந்து மணியை அடித்து எம்மை அழைத்து விசாரிப்பதை விட்டுவிட்டு நிருவாகம் பொலிசுக்கு போக முடியுமானால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாடுள்ள போது நாட்டின் காவலரான இராணுவத்திடம் - சுஸந்த மெண்டிஸிடம் - நாம் சென்றிருப்பது சரியே என்கிறார், யாழ் போதனா வைத்தியசாலையின் மலசலகூட சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பேச்சாளர் கந்தசாமி அவர்கள்.

மெண்டிஸிடம் செல்லுமளவுக்கு என்ன பிரச்சினை நடந்தேறியுள்ளது? இதனையும் கந்தசாமியே விளக்குகிறார். சாதிக்கு ஒரு நீதி இங்கு நிலவி வருகிறது மலசல கூடத் தொழிலாளர்கள் எனும் பெயரில் நியமனம் பெறுபவர்களில் நாம் மட்டுமே தொடர்ந்தும் மலசல கூட சுத்திகரிப்பில் ஈடுபட நிருவாகத்திற்கு நெருங்கியவர்கள் பழகியவர்கள் மட்டும் காற்சட்டையில் ஊத்தை பிரளாமல் அலுவலக வேலையாளராக இருந்து வருகின்றார்கள். இது எம்மை சாதி ரீதியாக புறமொதுக்குவதையே காட்டுகிறது. இதனை நாம் எதிர்க்கின்றோம். இதற்காக ஒரு சுற்று வட்ட ஒழுங்கில் இப்பதவிக்கு நியமனம் பெற்றவர்கள் அனைவரும் அலுவலக வேலையாளராகவும் மலசல கூட சுத்திகரிப்புத் தொழிலாளராகவும் பணியாற்ற வேண்டும் என்கிறார் கந்தசாமி அவர்கள்.

மேலும் மலசலகூட சுத்திகரிப்பாளர்களின் பேச்சாளர் கந்தசாமி அவர்கள் தமது பிரச்சினைகள் குறித்து ஆஸ்பத்திரி நிருவாகத்தை தொடர்ந்து குறை கூறுகிறார். தமது தொழிலாளர்கள் பிரேதத்தை புதைத்து விட்டு வருபவர்கள், அவர்கள் முகம் கழுவி உடுப்புகள் மாற்ற இடம் தேவை அத்துடைய இடமாக பாவிக்கப்படும் ஒரு அறை அளவிலான சிறிய வீடொன்றை நிருவாகம் பூட்டி விட்டு அவர்களே உடைத்து விட்டு எம்மை பொலிஸிடம் குற்றவாளிகளாக ஒப்படைத்து விடுகிறார்கள். எந்த வகையிலும் எம்மை வருத்திய நிருவாகம் விரும்புகிறது. சாதப்பெயரை சூட்டிக்காட்டும் வகையில் உயர் அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள் என்ற கந்தசாமியின் வாதங்களைத் தொடர்ந்து!

எமது லீவுகளை நிருவாகம் ஏற்றுக் கொள்வதில்லை அவசர லீவு கேட்டாலும் கொடுப்பதில்லை. முடியாக சம்பளமற்ற லீவு தான் போட்டு வருகிறார்கள். மருத்துவசாலை தவிர வேறு இடங்களில் இருந்து எடுத்துக்கொண்டாலும் அதை ஏற்கிறார்கள் இல்லை என்றார் / வருடமாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளி அலெக்ஸ்றாய்.

உயரதிகாரிகளுக்கு நாம் பணிந்து நடக்க வேண்டும். இல்லையேல் லஞ்சம் கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் எம்மை வருத்தி வேலை வங்குவார்கள். அல்லது எம்மை குற்றப்படுத்துவார்கள் என்கிறார் மற்றுமொரு சுத்திகரிப்புத் தொழிலாளி.

இராணுவம் குடா நாட்டை கைப்பற்றுவதற்கு முன்னர் இப்பிரச்சினை எப்படி இருந்தது எனக் கேட்டபோது அப்போது ஒரு அணுத முறையைக் கைக்கொண்டு தங்களுடைய காரியத்தை சாதித்துக் கொண்டு தங்களுக்கு நோவில்லாமல் போனார்கள் அப்போதும் பிரச்சினை இருந்தது ஆனால் அவர்களிடம் இருந்து நிறைவும் இருந்தது என்ற கந்தசாமி அவர்கள் இப்பிரச்சினை குறித்து தமிழ் அரசியற் கட்சிகளின் உறவு குறித்து கேட்ட போது தமிழ் கட்சிகள் குட்டைக்குள் கிடக்கின்ற சங்குகள் மாதிரி. எல்லாம் குழம்பிக் கொண்டு இருக்கின்றது. ஒன்றும் தெரியாத கட்டத்தில் இருக்கையில் நான் அவர்களுடைய தொடர்பை விரும்பவில்லை. ஆதலால் யார் ராசாவோ அவருக்கு சேவகம் செய்வது தான் சட்டம். இப்போது ராசாவாக இருக்கின்ற மெண்டிஸினுடைய காலில் விழுந்திருக்கிறேன் என்றார்.

எங்களுக்கு சார்பாக எதுவும் பிரசுரிக்க வேண்டாம் எங்களின் நியாயமான கோரிக்கையும் எங்களின் உண்மையான மன விசுவாசமான வார்த்தைகளையும் இந்த வெளி உலகம் அறிவதற்கு இங்கு வேலை செய்கின்ற 35 ஊழியர்களின் சார்பில் வேண்டுகோள் விடுகின்றேன் என்கிறார் கந்தசாமி அவர்கள்.

மெண்டிஸினுடைய தீர்ப்பு பாதகமாக இருக்குமாயின் பலகலை உடன் தொடர்பு கொள்வேன் என்ற கந்தசாமி தனது இறுதியான போராட்ட வடிவமாக பொது சன தொடர்புகளுடாக யாழ் போதனா வைத்தியசாலை தண்ணீர் தாங்கியில் இருந்து விழுந்து சாவேன். இது என்னுடைய இனத்துக்கும் என்னுடைய ஊழியர்களுக்குமாக அத தீர்மான கடைசி நடவடிக்கை என்றார் கண்கலங்கிய நிலையில்.

# எங்களுடைய மனம் சுத்தமானது

**— வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு**

எங்களுடைய மனச்சாட்சி சுத்தம். மேலே கடவுள் இருந்து தீர்ப்பளிப்பார். ஆகவே அவர்கள் சரியோ நாங்கள் சரியோ என்பது அவருடைய தீர்ப்புத்தான்- மனச் சாட்சிக்கு விரோதமாய் இல்லாமல் எங்களுடைய வேலையை சரியாக செய்கிறோம் என்கிறார் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி கனகரட்ணம் அவர்கள். இவரது முன்னிலையில் வைத்தியசாலையின் மலசல கூட சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பிரச்சினை பற்றி விளக்களித்தவர் நிருவாக அதிகாரி திரு. நாகலிங்கம் அவர்கள்.

1985 இலிருந்து அனைத்து சிற்றூழியர் தரத்திற்கும் மலசல கூட சுத்திகரிப்புத் தொழிலாளர் என்ற பெயரில் தான் நியமனம் அளிக்கின்றோம். இதிலிருந்து ஏனைய தரங்களுக்கு பதவி உயர்வுகள் பெற்றுச் செல்ல முடியும். இது எமது திணைக்களத்தின் நிலைப்பாடு. இந்த வகையில் 43 சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பதவி நிலைகளுக்கு நாம் 139க்கு மேற்பட்டோரை நியமித்துள்ளோம். ஆண் பெண் பரிசாரகர்கள் மற்றும் பொது வேலையாட்களும் இதனுள் அடக்கம்.

இவ்வாறு சுத்திகரிப்புத் தொழிலாளராக நியமனம் பெற்றவர்கள் அவர்களுடைய கல்வித்தகைமை தனி மனித ஆளுமை திணைவரவு முறைமை மற்றும் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் அவர்களுக்குரிய வேலைகள் பிரித்து விடுகின்றோம். அலுவலக வேலையாட்களாக வேலை செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களே- குறைவான கல்வி மட்டம் காரணமாக- தற்பொழுது மலசல கூட சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இவர்களை நாம் வேறு அலுவலக வேலைகளுக்கோ அல்லது வேறு பிரிவுகளுக்கு வேலை செய்ய விட முடியாது. இவர்கள் அவ்வேலைகளுக்கு லாயக்கில்லாதவர்கள் எனலாம்: இதன் அடிப்படையில் தான் இவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்ட தொழிலையே செய்து வர வேண்டியுள்ளது என்கிறார் திரு நாகலிங்கம்.

இடையில், பணிப்பாளர் அவர்கள், இதில் சாதிப் பிரச்சினை என எதுவும் இல்லை நானும் கூடசயம் தூக்கிக்கொண்டு போனனான். நாம் மலசலகூடம் கழுவி இருக்கிறேன் எல்லாரும் வெளிநாடு சென்றிருந்தபோது என்றார்.

அவர்களது குற்றச் சாட்டின்படி, சகல சுத்திகரிப்புத் தொழிலாளர்களையும் அவர்கள் விருப்பபடி சுற்று வட்ட ஒழுங்கில் வேலைக்கு விடப்படுமாயின் அதனால் வரும் சரி பிழைக்கு நாம் பொறுப்பு இல்லை என்றார் திரு. நாகலிங்கம்.

தற்போது சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுபவர்களிடம் இருந்து சாதாரண தொழிலாளர்களுக்குரிய பதவி உயர்வு கோரப்பட்டது. தொலைபேசி இயக்குனருக்கு பதவி விண்ணப்பம் கோரப்பட்டது. இவர்கள் தமக்கு தற்போது கிடைத்து வருகின்ற பண வருவாயைக் கருத்தில் கொண்டு இவற்றை நிராகரித்து விட்டு, தம்மை சாதி ரீதியாக ஒதுக்கிவிட்டோம் என குற்றம் சாட்டுவது ஏற்புடையது அல்ல.

மேலும், இத்தொழிலாளர்கள் தமக்குள்ளேயே ஓர் ஒழுங்கு முறையில் பட்டியல் தயாரித்து தமது விருப்பத்திற்கு ஏற்ற இடங்களில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் படி எம்மைக் கேட்கிறார்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க

# சிறுவர்கள் மீது ஆயுத மோதலின் தாக்கம்

'சிறுவர்கள் மீது ஆயுத மோதலின் தாக்கம்' என்ற தலைப்பின் கீழ். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் கிறேஷா மஷெலின் எழுதியுள்ள அறிக்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகள் இங்கே தரப்படுகிறது இக் கட்டுரை சிறுவர் பாதுகாப்பு நிதியமும், யாழ்ப்பாண அரசாங்க செயலகமும் இணைந்து நடத்திய சிறுவர் உரிமைகளுக்கான கருத்துப்பட்டறையில் பங்கு பற்றிய பேராளர்களுக்குப் பகிரப்பட்ட ஆவணங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. யுத்தத்தின் நேரடி விளைவுகளை மட்டுமன்றி மறைமுக விளைவுகள் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலத்தின் தேவை கருதி இது இங்கு பிரசுரமாகின்றது.

அபிவிருத்தியில் முதலீடு செய்யக் கூடிய வளங்கள் ஆயுத உற்பத்திகளுக்கு திசை திருப்பப்படுவதனால், கோடிக் கணக்கான சிறுவர்கள் ஒரு துப்பாக்கியை ஒரு போதும் கண்டிராத போதும் அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப் படுகிறார்கள்.

உலகச் சிறுவர்களது நிலைமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் 1996-ல் வெளியிட்டதொரு அறிக்கையில் மேற்கண்ட குறிப்புக் காணப் படுகிறது.

ஆயுத மோதல் சிறுவர்கள் மீது ஏற்படுத்திய காயங்கள் — அவை உடல் ரீதியான காயமாக, பால் ரீதியான வன்முறையாக, உளரீதியான துயரமாக இருந்த பகிரங்க அவமானங்களோ சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தை உள்ளீவகம் கொள்ளச் செய்த இயல்புகளாகும். பிள்ளை வளர்ச்சியின் சகல அம்சங்களையும் அவை உடல் ரீதியான, உள ரீதியான, உணர்வு ரீதியான எதுவாயினும் அவை எல்லாவற்றையும் ஆயுத மோதல் பாதிக்கின்றது. அத்தகைய விளைவுகள் ஒன்று திரண்டு அவற்றிடையே மேலும் பாதிப்பைக் கொண்டு வருகின்றன. பெண்கள் மீதும், குடும்பங்கள் மீதும் ஏற்படும் தொடர்புபட்ட விளைவுகளையும், பாதுகாப்பு வழங்கும் சமூக ஆதரவு அமைப்புக்களையும் அபிவிருத்திக்கான பாதுகாப்புள்ள சூழலையும் உற்று நோக்காமல் ஆயுத மோதலின் தாக்கத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.

உணவு வழங்கல்கள் தடைப்படுத்தல் பயிர்களும் கமத்தொழில் உட்பட்ட அமைப்புக்களும் நாசமடைதல், குடும்பங்களும், சமூகமும் சின்னாபின்னப்படுதல், மக்கள் தொகை இடம்பெயர்தல், கல்வி சுகாதார சேவைகளும், தண்ணீர் சுகாதார அமைப்புக்கள் அழிந்து போதல் போன்ற எல்லாமே சிறுவர்களை வெகுவாகப் பாதிக்கின்றன.

வரலாற்று ரீதியாக ஆயுத மோதலின் போது நிலவும் சிறுவர்களின் நிலைமையில் அக்கறை காட்டியவர்கள் சிறுவர்களது உடல் ரீதியான பாதிப்பிலேயே கவனம் செலுத்தியுள்ளார்கள். எனினும் பின்னை ஒன்று அனுபவித்த இழப்பு, கவலை அச்சம் போன்றவையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். யுத்தத்தில் சிக்கியுள்ள நாடுகளில் பெருந்தொகையாக சிறுவர்களுக்குப் பின்னைப் பராயம் ஒரு சமர் சொப்பனமாகியுள்ளது. ஆயுத மோதல்களால் வீடுகளை அழிக்

(10ம் பக்கம் பார்க்க)

## செம்மணவயல்

உள்ளே போய் வெளியே
வந்த காற்று உர்ர்ர்...என்று
உறுமிற்று
அக்கிரமங்களை மனம் பாலூட்டி
வளர்த்தது
மனித வாழ்வின் சிறப்பை உணரமுன்
உயிர் நாடி என்பது
வெறுப்பாயிற்று
துன்பச் சுமையை சுமந்தவர்களின்
சந்தோஷ டப்பா
காற்றில் பறந்து போயிற்று
அவளி விதைத்த விதை
முளையாய் முளைத்தது.
அழிக்கப் போன கை
சிகப்பாய் மாறிற்று.
விதைப்பும்
அறுவடையும் வந்து போயின.
விளைவு அற்று.
மனித முகங்கள்
நிணமும குருதியுமாய் எப்போ
மாறிற்று?
இனித துயர் களைய
யார் வருவார்?
செம்மண வயல் விதைப்பும்
அறுவடையும் எப்போ வரும்?

## ராஜ கிரீடம்

கனவுகளின் வியாபிப்பு
ராஜராஜன் ராஜ கோபுரத்தினை விட
உயர்ந்து நிற்கிறது - ஆனால்
உறக்கமின்றி விழிகள்
விழித்துத்தான் இருக்கின்றன.
ராஜ மரியாதை எம்
இராச்சியத்தில கற்பனைகளுக்கு
மட்டும் தானோ?
நிஜம் பெற்ற குழந்தையாக
மனிதன் மாறுவதுதான்
எப்பொழுது?
நாணற் புற்களுக்கு கூட
வரலாற்றில் கம்பீரப் பதிவு உண்டு.
இங்கு-
ஆலமரங்கள் அச்சமுட்ட
மட்டுமேதாம் இருக்கின்றன.
கோடை காலக் குளிரில்
காணாமல் போன
மகனை-
எங்கே நாம் தேடுவது?

இ. கோகுலராகவன்

# கவிதைக்கதிர்

### இருதலை கொள்ளி

தகவல் தராமலிருப்பது
மறைப்பதற்கச் சமன்
தேச விரோதம்
அரசு சொல்கின்றது
தகவல்கள் கொடுப்பது
காட்டிக் கொடுப்பதாகும்
தேசத் துரோகமாகும்
ஊர் வழமை உரைக்கிறது.
மக்கள் பாவம்.
ஆம்!
பாவம் மக்கள்

மது

### அரச சேவை

தெருக்கரையின் ஓரத்தில்
ஒரு பகுதியினர்
குழியைக் கிண்டினர்
மறு பகுதியினர்
விரைந்து
குழியை மூடினர்
'பொதுமகன் ஏனென்றார்
குழி வெட்டுவதே
எங்கள் கடமை
அதை மூடுவதே
இவர்கள் கடமை
மரம் வைப்பவர்
வரவில்லையாயின்
நாம் என்ன செய்வது?
அவரவர் கடமை
அவரவர் செய்வதே
அரசுக்குப் பெருமை'
எனப் பதில் வந்தது

— ராணி

### இறுமாப்பு

என்ன குறை எனக்கு
என்று
இறுமாந்திருந்தவர்
படுத்த படுக்கையான
போது
பக்கத் துணைக்கு
ஆளில்லையெனப்
புலம்பினார்
கேட்கவும் ஆட்களில்லை
அருகில்.......

அபி

### அகதி

தலைமையனின்
சவப்பெட்டிக்குள்
ஒளிந்து கொண்ட தம்பி
ஜெர்மானியத்
தெருக்களில்...

— சோபா

## இருப்பு...?

பல திசைகளிலிருந்தும் துரத்தப்படுகிறேன்.
அகப்படுவது திண்றலாய் தெரிந்ததால
ஓடுவது சாத்தியமாயிற்று.
சில நேரங்களில சிந்திக்கிறேன்
ஓடுதல என்பது
ஓட்டத்துடன சம்பந்தப்பட்டதா?
அல்லது துரத்துதலுடனா?

சில நேரங்களில் உணர்கிறேன்
'அன்பு' என்ற பதம
கட்டுகளுடன் சம்பந்தப்பட்டது.
கட்டுக்கள உடைபடும போதல்லாம
அன்பு என்பது சிதறிப் போகிறது.

நண்பனே!
புல்லாங்குழலிசை
துளைகளுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.
ஊதுதல, அழுத்துதல
எல்லா வற்றறும அப்பால்
இசைத்தலென்பதுமிக உயிர்ப்பானது.

துவாரங்களின் அடைபடுதலில்
துயரமாய் வழிகிறது
என இசை.

— கொற்றவை

நன்றி : பெண்

## மடக்கு

கொத்தி வயலில்
பாத்தி கட்டி
நீர்ப் பாய்ச்சி
மொத்த வியாபாரிக்கு
கீரை விற்ற விலை
முப்பது ரூபாய்
அவர்
என் கண் முன்னே
அதை விற்ற விலை
அறுபது ரூபாய்.

— சாமந்தி

## தீ

இலங்கை இன்னும்
ஏன் எரிகிறது?
அனுமன் வைத்த தீ
அணைக்கப் படாததால்!

— யது

## கோலம்

அடுக்கி வைத்த
டண்மூடைகளுக்குள்
அசைகிறது மனிதத்
தலைகள்
பாதுகாவலர்கள்
போலும்.

— காயா

## காலம்

சுட்டெரிக்கும் வெயில்
கையில் குழந்தையைச்
சுமந்தபடி
இறங்கி நடக்கிறாள்
'சென்றி பொயின்ற்'

— திவி

## முயன்று பாருங்கள்!

கவிதைகளைப் புனைய வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்கள் அதிகமாகி வருகின்றனர். அவர்களது கவிதை புனையும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் அதே சமயம், தமிழ் இலக்கண அறிவையும் ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் வெண்பா புனையும் போட்டி ஒன்றை அறிமுகப்படுத்துகின்றோம். கீழ்வரும் அடியை ஈற்றடியாகக் கொண்ட வெண்பாக்களைப் புனைந்து இரு வாரத்தினுள் காலைக்கதிர் த.பெ. 145, யாழ்ப்பாணம முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தகுதியானவை நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

இந்த வாரத்திற்குரிய ஈற்றடி.

'சீருடையார் செம்மையைச் சொல்!'

## நோயை உருவாக்கும் வைரசு அமெ. ரஷ்ய ஆய்வுகூடத்தில்

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்டுதோறும் முப்பது மில்லியன் மக்களைக் கொன்றாக்கி வந்த பெரிய அம்மை நோய் இப்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இதனை உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O) அறிவித்திருப்பது உலகறிந்த விஷயம்.

ஆனால், இந்த நோயை (Small Pox) உருவாக்கும் வைரசுகள் மட்டும் அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும, ஆய்வுகூடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டு ஜுன் 30ம் திகதிக்குள் எஞ்சியுள்ள கிருமிகளையும் முற்றாக அழித்து விடுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் பணித்துள்ளது. எதிர்பாராத விதமாக இந்தக் கிருமிகள் ஆய்வுகூடத்தைவிட்டு வெளி வந்தால் பெரிய அம்மை மீண்டும் பரவி விடும் என்ற பயம்தான் இந்த நடவடிக்கைக்குக் காரணம். இந்தத் திட்டத்திற்கு ஆதரவு இருந்தாலும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. கிருமிகளை முற்றாக அழிப்பது ஆராய்ச்சிப் போக்கிற்கு நல்லதல்ல என்று சில விஞ்ஞானிகள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

## நீச்சலுடையில் அழகுராணிகள் போட்டிக்கு வரத்தடை

இந்தியாவில் நடைபெறும் அழகுராணி போட்டிகளின் போது பெண்கள் நீச்சலுடையில் வருவது தவிர்க்கப்பட வேண்டும் என பி.ஜே.பி. அரசு உத்தரவிட்டுள்ளது. இந்திய கலாசார மரபுகளை கொச்சைப்படுத்தும் இத்தகைய அலங்காரங்கள் தேவையற்றது என அரசு குறிப்பிட்டது.

அஹமதாபாத் நகரில் நடந்த அழகுராணிப் போட்டிக்கு பார்வையாளர்களாக இரு பி. ஜே. பி உறுப்பினர்கள் சென்றனர் எனவும் நீச்சல் உடையில் எவரும் வருவதை தவிர்க்கவே இந்நடவடிக்கை எனவும் இந்துஸ்தான் ரைமஸ் பத்திரிகை கூறுகிறது.

# உருமறைப்பு

விருந்து தேடி வந்த குற்றத்துக்காய்த் திகைக்க வேண்டியதாயிற்று. முதன்மைத் தெருவின் பெரிய சந்தியுடன் மிதிவண்டிகளைத் தரிக்க வைத்தோம். விலாசத்தைச் சொல்லி, யாரைக் கேட்டாலும் கருவிழி, வெண்விழி மட்டுந் தான் முழுதாய்த் தெரிந்தது. மனிதர் என்ன சுலபமாய் சொல்லி விட்டார். எந்தக் குழந்தைப்பிள்ளையையுங்கேளுங்கோ, என்ர வீட்டைடக் எண்டு காட்டும்.

ஒவ்வொருத்தனும் நினைச்சுக்கொண்டு இருக்கிறான். ஊருக்கை நான் தான் விலாசம்! தேட வெளிக்கிட்டாத் தானே தெரியுது! அடிக்கடி நடக்கிறது தான். தெரிஞ்சும் நமபினமே! எங்கடை மூளையை .. தாய் கொண்டு போக!

இடைத்தூரம் பத்துப்பன்னிரண்டு கட்டை; புதிய வருகை – சுளுவாகவா கண்டு பிடித்துவிட முடியும்? வார்த்தை வடிவிலான வரைகுறிப்பை நினைவு கூர்ந்தோம் – அதன் வழிதான் முனைய வேண்டியதாயிற்று. கிராமத்தின் முள்ளந்தண்டுப்பள்ளத்தில் இறங்கினோம். (நடுவூடாய்ச் செல்லும் இளைத் தெரு) காற்கட்டை தூரத்தில் இடப்புறக்கையொழுங்கை. எட இதென்னடா இது, முடிவே இல்லாத ஆறே| வளைஞ்சு — ... நெளிஞ்சு சூ எல்லாம் கல்வீடுகள் மனிசன் சொன்ன துஞ்சரிதான்! ,எங்கடை ஊரைக் குறைவா நினைச்சிடக்கூடாது படிச்ச, படிச்ச பணக்காரர் நிறைஞ்ச ஊர்!,

எட, வீட்டுக்கொரு ரீ. வி! இதேன் அன்ரனாப்பைப்புக்களை அப்பிடியே விட்டிருக்குதுகள்? ஏது கரணட்? அவன் நிப்பாட்டி மூண்டாவது வருசமாப போகுது! அங்கெ, ஒரு அன்ரனாவெ? செத்துக் காஞ்ச மீன்முள்ளு மாதிரி! அதுசரி இதுகளெ முத்தத்தில் தான் நட வேணுமோ? கோடிக்குள்ளே நட்டா என்ன? கெட்டிக்காரர் தான் எங்கட சனங்கள் கண்டு பிடிச்சவனுங் கற்பனை பண்ணியிருக்கான் ஏலுமே இன்னொரு பயன்பாட்டையும் வழங்க? பறையறையிறது! எங்களிட்டை ரீ. வி இருக்கு; எவ்வளவு வசதியான குடும்பம் நாங்கள்! வியாதி – மனோவியாதி! பணக்காரரிட்டை இல்லை; ஏழையளுக்கும் கிடையாது. இதுகளுக்குத் தான்; சமையறைக்கை மூடங்க வேண்டியது 'ஃபறிச்' நடுக்கூடத்தில் வைக்கிறதுகளெல்லே, நாலு பேருக்குப் படங்காட்ட? இந்த நடுத்தர மேற்தட்டத்தான் மனிசன் பணககாரர் எண்டிருக்குது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலாயிற்று பல விரல் ஒழுங்கைகள் (கையொழுங்கையிலிருந்தும் பல பிரிந்தால் வேறு பதத்திற்கு எங்கே போக?) எல்லாம் ஒரே மாதரி! இரண்டொரு தருட் டொழுங்கைகளுமளுமதட்டுத் தடுமாறினோம். சலிப்படைவதில் நண்பன் முந்திக்கொண்டான். என்னடாப்பா இது! ஆரையேன் விசாரிக்கலாமெண்டா ஒரு குஞ்சு குருனைக் கூடக்காணவேல்லை.

எல்லா வீடுகளிலயுஞ் சந்தடி தெரியுது; பூட்டிபபோட்டுக்,

செ. பொ. சிவனேசு

கிடக்குதுகள்! என்ன சனங்களப்பா!

சற்றுத் தள்ளிப்போக அங்கே பார். கேற்றடியிலை ஒரு கிழவன் இருக்குது – கேப்பம்

முதியவரின் நோக்குதல் எமது திக்கிற்தான் கவனித்ததாய்த்தெரியவில்லை. 'கண்ணுஞ் சரியாத் தெரியா போலை!

> தமக்குள் தாமே உருமறைத்தும், மறைந்தும் வெளி வேடம் காட்டி மகிழும் போலித்தனங்களைச் சாடுகிறதோ ... ... என்ற எண்ணமே எல்லா நிகழ்ச்சிகளையும் கடந்து மேலெழும்.

மிக நெருங்கிய நிலையிற் சற்றுத் திகைத்தார். வலுமிக்க ஒளிக்கதிர்கள் ஊடுருவுவதெனச் சிரமப்பட்டார். இமைகளை இறுக்கினார்! புருவங்களின் மேற்கை வைத்துப் பிம்பப் பிசிறலைச் சரி செய்து. உற்று நோக்கினார்,

அப்பு — மறுகை செவிச் சோணையை அணைத்தது. குரலில் வலுவை உயர்த்தினேன், இந்த ஊரிலை என்னண்ணை ஊரடங்குச் சட்டமே போட்டிருக்கு?

'ஏன் மோனே?,

ஒரு மனிசரையும் வெளியிலை காணேல்லை?, வெடுக்கென எழுந்தார்; தள்ளாடினாலும் வனோதவேகம்; உடசென்று மறைந்தார்,

'என்னெடா இது? விலாசம் விசாரிக்கலாமெண்டா'

'ஒண்டு தெரியுமே? நாயிருக்கைகல்லே? ஆரேன் சின்னப் பெடியன் கல்லெறியவேணும், தெருவிலை ஒருத்தர் போகேலாது – எலலாரையும் பார்த்துக் குரைப்புத்தான் – எறியிறவன் ஆர்எறியாதவன் ஆர் நல்லவன் ஆர் கெட்டவன் ஆர்? – எல்லாருக்கும் தேவாரந்தான்; அதின்ர ஆயுள் முழுக்க இதேதான் இளந்தாரிளுகக்கு வயசு போனதுகளெண்டா ஒருபவுடி – நக்கல்கள், நளினங்கள்! நாங்களும் நையாண்டியோடை தொடங்கிட்டம், எங்களைப்பாத்துக் கிழவன் பயப்பிடுறது ஞாயந்தானே?

சிறியதொரு சந்திப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம். சூழவுங் குடியிருப்புக்களின் அடாத்தி,

நண்பனுள் எரிச்சல் மிகுந்து போயிருந்தது.என்னடா இது? ஒரு நேர விருந்துக்காக நாய் படாப்பாடு! மனிசன் கூப்பிடாமலே விட்டிருந்தா எவ்வளவு நல்லது. தேவையில்லாத அலைச்சல்,

பொறு, பொறு இந்தச் சனங்களுக்கு ஒண்டும் செய்யேலாது தந்திரோபாயந்தான் சரி.

தந்திரோபாயமா?

ஓ, அரசியல் தந்திரோபாயம மாதிரி செருமலாற் குரலைச் சரி செய்தேன். வலுமிக்க குரல்வளம் எவ்விதம் வந்ததோ என்னுள்! ... சரியான மடையன்ரா நீ! வேறெ இடமில்லாமல் இந்த ஊருக்கே வந்தனீ பொமபிள பார்க்க? தட, தட வென வீடுகள் வாய் பிளந்தன. டேய், ஏன்ரா இப்பிடிக் கதைககிறாய? என்ர மனிசி கேளவிபபட்டா...

நீயேன் நடுங்கிறாய்? நான் சமாளிப்பன் பவுடியெப்பார் .. பெரிய கதாநாயகன மாதிரித் தத்துவம பேசினாய் – மோட்டச் சைக்கிளைக் கொண்டுவா எண்டா – வசதி செழிப்பு களைக் காட்டக் கூடாது; வறுமைப்பட்டவன் மாதிரிப் போகவேணும்; பெட்டேன்ர குடும்பம் பணத்தை விரும்புதோ பண்பை விரும்புதோ எண்டு அறிய வேணும் உன்னாலெ பார் சேர்ந்த குற்றத்துக்குக் கால் முட்டெல்லாங் 'கழண்டு போச்சு!'

தந்திரம் நம்பவியலாக் கச்சிதம், நண்பனின் காதோடு' பார், பார், வாறவை எல்லாரிட்டையுங் கலியாண வயசிலை குமருகள் இருக்குப் போலை!

நொடிக்குள் ஊரின் சுற்றிவளைப்பு நோட்டமிட்டேன். என்ன முகங்கள்! என்னகளை! படிச்சதுகள், அதிலும், வசதியானதுகள் மிடுக்கும செருக்குங் கலந்த களை!

வந்தவரத்தையுந் தான் வர்ணிக்க வேண்டும் ஒவ்வொரு வராய் தேவையில்லை. பருத்த உடலங் கொண்ட அம்மாள் போதும் ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு கடவுளை நம்பாமையைத் தற்காலிகமாய் ஒதுக்க வேண்டியிருந்தது. ஆன்மா'வை நொடிப் பொழுது நம்பவிரும் பினேன. அத்தகைய கற்பனையிற் சுகங் கிடைத்ததே! இது தான்! 'என்ன உடம்பு! இவ்வளவு வீச்சாய் வருகுதே சுமக்கிற ஆத்மா. என்ன பாடுபடும்! – அட, ஒரு முற்போக்கு வாதி இப்படியும் நினைக்கிறதா! சக மனிதரின் உடலியல்பைக் கேலி பண்ணுவது எத்தனை அபத்தம்! மூன்றாந்தர நகைச்சுவையில்லையா? உண்மை தான். மனச்சான்றுக்கு விரோதமின் றியுங் குறிப்பிட்டாக வேண்டும்?

விசாரித்தனர் ஆளுக்காட் கேள்விகளாக; சிலர் மாப்பிள்ளையிடம நேரடியாக வாயே திறக்கவில்லை வெலவெலத்துப் போயிருந்தானே? எல்லா விடையும் எனது உபயம் – சொந்த இடம்? அங்கை "இன்னாரைத் தெரியுமே?" – 'ஆற்றைபகுதி?' 'மாதச் சம்பளம்? – தாய், தகப்பன்? – 'சகோதரங்கள்?' – 'சொந்த பந்தங்கள்?

முக்கியமானது 'என்ன உத்தியோகம்?'

'வெளிநாடு – கனடா'

'ஆற்றை மேளுக்குப் பேச்சுக்கால் நடக்குது?

சொல்லவில்லை; மர்மம்

பர்ரிய உடலம் மற்றவர்களைப் பின் தள்ளியது மிண்டி, மிண்டி முன் பகுதியைத் தக்க வைத்தது. 'தம்பிமார், நல்லாக் களைச்சுப் போனியள்! வந்து ஏதாவது குடியுங்கோ வன்.

நின்று கொண்டிருந்த உரு. இல்லத்திற்கு நேராய் எம்மை ஈர்த்துச் செல்வதிற் சிரமமில்லை.

ஏன் முத்தத்திலேயே நிண்டிட்டியள்? உள்ளுக்கு வாங்கோவன்!

பரவாயில்லை. கொஞ்சப் பச்சதண்ணி தந்தியளெண்டாக் காணும?

ஏன்? —

இல்லை, பரவாயில்லை, தண்ணி காணும்,

வரச்சற்றெ தாமதம், சூ! என்ன துபபரவு! தண்ணியெப்போலை வெள்ளிச் செம்புந்தான் மிளிருது; பேணியளுந் தான் எட, பச்சத்தணணியில்லை எலுமிச்சம் பழப் தண்ணி!

திருவாய் மலர்ந்தார்; குடித்தபடியே கேட்டோம்: எனர அவரும் வெளியிலதான்-சவுதி-எஞ்சினியர் மாசம் அறுயது அறுபததஞ்சு வரும். ஒரு மனும மகளும கனடாவில் - சிற்றிசன் ஆயிட்டினம். கல்யாணமும் முடிஞ்சுது இந்த ஊரால் ஞாயமான காணி எங்களிட்டெத்தான். என்னோடெ மகள் மடடுத்தான் – கடைசி, கல்யாண ஒழுங்கைப் பாக்கச் சொல்லி அவரிட்டெயிருந்து காகிதம் வந்தது – போன கிழமை தான் ..

பேச முனைந்தார். ஏனையோரிடமும் உந்துகை-மூறுக் கொணடேன். "ஐயா, இந்த விலாசத்துக்குப் போக வேணும, வீடு எங்கே?"

மீண்டும் அம்மாள் அரக்கப் பரக்க ஓடி வந்தாள் இந்தக் கழுகு மாப்பிள்ளைக்குஞ் செக பவளீகரஞ் செய்து போடுமெணட பயமாக்கும்.

வழுக்கையைத் தடவினார். "அட' இந்த அடறசா? எங்கடெ திம்லசன் தான். வாங்கோ, கொண்டுபோய் விடுறன்".

மிதிவண்டிகளை உருட்டிய படி இளம்பினோம் "எனக்கு நாலு சண, ஒரு டோற்றர். எல்லாரும ஃபெரினில தமபி கனடாவில் எறதப பிளேன்? ஆங் ரொரன்ரோவா! மகள் மொன்றியால். ஸெஸ்ருக்காக குமிச்சு வச்சிருக்கினம பிறதேஸ்மார். நல்ல மாப்பிள்ளையாப் பாககச் சொலலி அடிககடி லெற்றஸ் வந்தபடி".

திறையப் பேசினார். இறுதியாய்க் கேள்வி; "என்ன அறுவலா அவரெபபாக்கப் போறியள்? அவருக்கு டோற்றஸ் இல்லலயே?"

நாங்கள் அங்கு விருந்துக்கு தான் போறம் வேறொன்றுமல்லை என்றேன்.

இடுக்குற்றிருக்க வேண்டும். சற்று திரைறியவர் சட்டென்று திரும்பினார். [illegible] உறுததார். ஒரு நொடி எனது தோள தொளதத. 'டாலி டாக்' மேற்சட்டை வழியாகக் கால்வரை வழிந்தது பார்வை. அவ்வளவுந்தான் பாதையைக் கைகாட்டிப பின் வாஙகிக கொண்டார். தெளிவிலலை விளககம் பெறுவோமென்றால்—— எட, இந்த மனிசன் என்ன மதறு வாதும்ப! மூடி முழிக்கிறதுக் குள்ளா!

"எப்படி என்ர டூபடா? இதுகள தரவழியளை அப்படித்தான ஆட்டிப் படைக்க வேணும!

"அதுசரி, இப்ப எங்க திரும்புறாய!"

"பழைய இடத்துக்கு: வேறெ ஆரேபேன் தாள்

## இவ்வார சிறுகதை

முன்னிலும் வியர்வை பெருகியது – ஆசுவாசமான வியர்வை குளிர்ச்சியும் வெக்கையுமாய் மேற்சட்டை உடலில் ஒட்டியது, தொண்டை நனைந்ததிற் தெம்பு. விடை பெற்றோம். ஏனையோர் இன்னமும் தெருவில்,

வாசலைத் தாண்டவும் முதலிற் தோன்றிய முகம் அவசரமாய் முன் வந்தது. வழுக்கைத்தலை, அலட்சியப் பார்வையின் நிரந்தரம். முதுமையாலையா? – படிச்ச திமிராலையா? – ... அல்லது [illegible] இந்தக் குறிப்பு!

பிடிச்சர வேணும் இவைகுள் ஒருவனது உதவி கிட்டியது.

திரும்பும் போது பெரியவர் வழிமறித்தவர் "தம்பி என்ரே நாலு மகன்மாரும் கலியாணஞ் செய்திட்டினம். அவெயள் தங்க தங்கெட பாடடெப் பாக்கத் தான் சரி. மகளும் நியூசி இந்த அகதிக் காசெடுத்துத்தான் சமாளிக்கிறா! பொப் — என்ன? .. .. இந்த — வேலை பெண்டு இன்னும் ஒண்டும் கிடைக்கேல்லெ! என்ர பென் சனில தான் எங்கட [illegible]

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வைகறைக்கதிர்

## மன்னர் அலெக்சாண்டரும் முனிவர் டான்டமிஸும்

மாமன்னன் அலெக்சாண்டர் ஒரு தடவை டான்டமிஸ் என்னும முனிவரைப் பற்றிக் கேள்விப்பட்டான எந்தப் பற்றும் இல்லாத துறவியான டான்டமிஸ் முனிவரைச் சந்திக்க விரும்பினான். எனவே தனது ஊழியர்களை அழைத்து டான்டமிஸ் முனிவரைக் கூட்டி வரும்படி தூது அனுப்பினான்.

அரசனின் ஆணைக்கு இணங்கிய ஊழியர்கள் முனிவரிடம் சென்றனர், ''எல்லோருக்கும் அரசரான மாமன்னன் அலெக்சாண்டர் உங்களைத் தன்னிடம் வரும்படி அழைக்கின்றார் இந்த அழைப்பை ஏற்று நீங்கள் அவரிடம் சென்றால் உங்களுக்கு நல்ல வெகுமதிகள் கிடைக்கும். தவறினல் உங்களது கழுத்து வெட்டப்படலாம்'' எச்சரிக்கை கலந்த அழைப்பைத் தூதுவர்கள் முனிவரிடம் விடுத்தனர்.

அரசாங்க ஊழியர்களை ஏறெடுத்துப் பார்த்த முனிவர் ''மன்னர் அலெக்சாண்டர் வழங்கப் போகும் வெகுமதிகள் எனக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை மரங்களின் நிழல் தான் எனது வீடு. காய் கனிகள் தான் எனது உணவு. தண்ணீர் எனது பானம். மன்னர் அலெக்சாண்டரால் என்னைக் கொல்ல முடியும் என் ஆவியை அழிக்க அவரால் இயலாது. பணத்தையும பொன்னையும் விரும்புபவர்கள் தான் ஆசை வார்த்தைகளுக்கு மயங்குபவர்கள், இதனை மன்னனிடம் நீங்கள் போய்க் கூறுங்கள்'' என்று கூறி நிறுத்தினார்.

''அரண்மனைக்கு திரும்பிய ஊழியர்கள் மன்னனிடம் டான்டமிஸுக்கு உங்களைப் போன்று எந்தவித நிர்ப்பந்தங்களும கிடையாது எனவே அவர் உம்மிடம் வரமாட்டார் ஆனால் உங்களுக்கு ஏதும் தேவை ஏற்படும் பட்சத்தில் தன்னிடம் வரலாமெனக் கூறினார்'' என்று உரைத்தனர்.

''இவர் ஒருவரிடம் தான் நான் தேடியவைகள உண்டு. எனக்கு நிகரானவர் இவர் ஒருவரே'' என்று வியந்துரைத்தார் மன்னர்.

## மாம்பழம்

மாம்பழம் நல்ல மாம்பழம் - அப்பா
வாங்கித் தந்த மாம்பழம்
மாமபழம இது காணக்காண
வாயினிக்கிற மாமபழம.
மாமபழமிவை கிடைத்த படியால்
மகிழ்வினோடு வருகிறேன
தீ பழ மிதைச் சீவி வெட்டிச்
சிரித்துச் சிரிததுத் தின்னுவோம்
தின்னுவோம் வா தின்னுவோம் வா
சீவிச் சீவித் தின்னுவோம்
பொன்னுருண்டை போல - நல்ல
புதுமையான மாம்பழம்.

நவாலியூர்
க. சோமசுந்தரப்புலவர்.

## நாயார் வேலை

பாக்குப் பாக்கு
மினைங் காலால்
வயிற்றில் சொறிந்து கொள்கிறார்.
பலகலக் காட்டிச்
சுற்றிப் பறக்கும்
ஈயைக் கௌவப் பார்க்கிறார்
வளைந்து வளைந்து
வாயைத திறந்து
கண்ணைத்துக்கிடந்து பார்க்கிறார்.
நாக்கை நீட்டி
இளைத்து இளைத்து
முனனங் காலை நீட்டுகிறார்.
வாலைக் கடித்து
மெலல உறுமி
வளையம் சுழன்று போடுறார்
நிலத்தைத் தோண்டி
களைஞ்சு மணந்து
சுருண்டு நாயார் படுக்கிறார்.

## சில தமிழ் நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

1. தொல்காப்பியம் — தொல்காப்பியர்
2. சிலப்பதிகாரம் — இளங்கோவடிகள்
3. மணிமேகலை — சீத்தலைச் சாத்தனார்
4. சீவக சிந்தாமணி — திருத்தக்க தேவர்
5. குண்டலகேசி — நாதகுத்தனார்
6. திருக்குறள் — திருவள்ளுவர்
7. கம்பராமாயணம் — கம்பர்.
8. மகாபாரதம் — வில்லிபுத்தூர் ஆழ்வார்
9. தண்டியலங்காரம் — தண்டி
10. நன்னூல் — பவணந்தி முனிவர்
11. கலிங்கத்துப் பரணி — சயங்கொண்டார்
12. தேம்பாவணி — வீரமா முனிவர்

தொகுப்பு எஸ். சிவனேஸ்வரன

## வளரும் அரும்புகளுக்கு

காலைக்கதிர் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பகுதியாக 'வைகறைக்கதிர்' வெளிவருகிறது. இப் பகுதிக்கான படைப்புக்கள் பாடசாலை மாணவரிடமிருந்தும், சிறுவர்களின் படைப்பாற்றலை வளர்க்க விரும்புபவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகிறது.

தொடர்புகளுக்கு:
வைகறைக்கதிர், மேற்பா காலைக்கதிர்,
த. பெ. எண் 145, யாழ்ப்பாணம்.

## மரத்தின் சாட்சி

ஒரு முறை வயதான முதியவர் ஒருவர் தீர்த்தயாத்திரை போவதற்கு விரும்பினார். இதுவரை தான் கஷ்டப்பட்டு சேமித்து வைத்திருந்த ஆயிரம் தங்கக் காசுகளை ஒரு பணப்பையில் போட்டு - அதனைத் தனது நண்பன் ஒருவனிடம் கொடுதது;

'நான் தீர்த்த யாத்திரை போகிறேன். திரும்பிவரும் போது தந்தால் போதும்' என்று கேட்டுக்கொண்டார். முதியவர் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்துத் தீர்த்த

ஜெயா மாமா

யாத்திரையை முடித்துக் கொண்டு வந்து தன் நண்பனிடம் கொடுத்து வைத்திருந்த பொற்காசுகளை தருமாறு கேட்டார். அதற்கு அவன் 'பொற்காசுகளா? விளையாடுகிறாயா? இப்பொழுது தான் தீர்த்தயாத்திரை முடித்துவிட்டு வந்திருக்கிறாய். அநாவசியமாக ஏன் பொய் சொல்கிறாயே' என்றான்.

முதியவர் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் தான் அவரிடமிருந்து பொற்காசுகளை வாங்கவில்லை என்று ஒரேயடியாக கூறிவிட்டான். வருத்த மடைந்த முதியவர் அரண்மனைக்குச் சென்று அரசரிடம் தம் வழக்கை கூறினார். அப்பொழுது அரசரின் நெருங்கிய நண்பரும் ஆலோசகருமான பீர்பாலும அங்கிருந்தார். அரசர் பீர்பாலுவிடம் 'இந்த வழக்கை நீங்க ஆராய்ந்து தீர்ப்புச் சொல்' என்று கூறினார்.

பீர்பால் மோசடிக்காரனை அழைத்து வழக்கு விசாரணையைத் தொடங்கினார். முதலில் முதியவரைப் பார்த்து 'நீங்கள் இவரிடம் ஆயிரம் பொற்காசுக் கொண்ட பண முடிப்பைக் கொடுத்தாக கூறுகிறீர்கள், நீங்கள் எந்த இடத்தில் இவரிடம் கொடுத்தீர்கள்? என்று பீர்பால் கேட்டார்.

'காட்டில் ஒரு தனியான இடத்தில் ஒரு மாமரத்தின் அடியில்தான் இவரிடம் பண முடிப்பைக் கொடுத்தேன்' என்றார் முதியவர்.

நீங்கள் பணமுடிப்பை இவரிடம் கொடுக்கும்போது சாட்சி யாராவது இருந்தார்களா? என்று கேட்டார் பீர்பால்.

அந்த மாமரம்தான் சாட்சி அதைத்தவிர வேறு சாட்சி கிடையாது என்றார் முதியவர்.

மனிதனை சாட்சிக்கு வைக்காமல் மரத்தை சாட்சிக்கு வைத்திருக்கிறாரே இந்த அப்பாவி பெரியவர். என்ன செய்யலாம் என்று தனது மனதிற்குள் யோசித்த பீர்பால்!

சரி, ஒன்று செய்யுங்கள். நேரே அந்த இடத்திற்கு போய் மாமரத்திடம - இங்கு சாட்சி கூறுவதற்காக நான் கூப்பிட்டேன் என்று அதனிடம் கூறுங்கள் என்று பெரியவரிடம் சொன்னர் பீர்பால். பொற்காசுகளை இழந்த கவலையில் எதைப்பற்றியும் சிந்திக்க அந்த முதியவருக்கு தோன்றவில்லை. நேரே காட்டை நோக்கிச் செல்லலானார்.

அவர் சென்ற சிறிது நேரம் கழித்து, எவ்வளவு நேரம் ஆகிறது! இன்னும அந்த மனிதர் திரும்பவில்லையே! நடுவழியில் எங்காவது தூங்கு கிறாரோ என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

( 0 ஆம் பக்கம் பார்க்க)

## விடுகதைகள்

1) இரண்டு பேர் சேர்ந்து கொண்டு இடித்திடித்துக் கொணறார். கைவிரலால் அமுக்கி விட்டுக் கயிறாகத் திரித்தார் கொதித்து வரும் குளத்திலிலே முழுககாட்டி எடுத்தார் கொம்மாளம் போட்டுக் கொண்டு பல்லாலே கடித்தார் அது என்ன?
2) உழவன விதைக்காத விதை, மேசன் கட்டாத கட்டடம். வண்ணான் வெளுக்காத வெள்ளை. சிற்பி செதுக்காத கல். அது என்ன?
3) ஏணி மேலே கோணி, கோணிமேலே குழாய் குழாய் மேலே குண்டு, குண்டுமேலே புலலு புலலு மேலே பூச்சி என்ன?
4) சங்கீதம் பாடும, சல்லாபம செய்யும் - சமயத்தில் ரத்தம குடிக்கும் அது என்ன?
5) கால் இல்லாத கள்வன், கால் உள்ளவனைப் பிடித்தான் தலையில்லாதவன் அதைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தான் யார் அவர்கள்?

### விடைகள்

துஷ்ய - மயூரன்

1. முறுக்கு 2. பல் 3. (தலையில் பேன் உள்ள) ஆள் - மனிதன் 4. கொசு 5. பாமபு-தவளை - நண்டு

# இந். இலங்கை உறவு விரிசலில் கச்சதீவு - தொடக்கப்புள்ளியா?

இலங்கை - இந்தியா இரு நாட்டையும் பிரிக்கும் பாக்கு நீரிணையில் ஒரு எல்லைக் கல்லாக அமைந்திருக்கும் கச்சதீவு - தமிழ் நாட்டு மீனவர்களின் இரத்தத்தால் சிவப்பேற்றப்பட்டு இன்று இரு நாட்டு உறவில் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை கடற்படையால் சகட்டுமேனிக்கு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும் - காயப்படுத்தப்படுவதும் - கைது செய்து சிறையில் அடைப்பதும் இதற்கு காரணியாக அமைகின்றது.

இதுவரை, இந்த சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு இரு நாடுகளும் உருப்படியாக ஒரு திட்டத்தை வகுத்து செயல்படவில்லை என்பது தான் உண்மை. அப்பப்ப நடக்கும் சூட்டுச் சம்பவங்களை இந்திய அரசு பணிவாக கண்டிப்பதும், அதை செவிடன் காதில் ஊதிய சங்காக இலங்கை அரசு அலட்சியப்படுத்துவதும் வழமையான இராஜதந்திர நடவடிக்கைகளாக இரு நாடுகளும் கருதுவது - எதிர்காலத்தில் ஒரு ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுவிடும் என்பது தமிழ் நாட்டில் இருந்துவரும் செய்தி.

இன்று, கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெற வேண்டும் என்னும் கோஷத்தை தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் கையில் எடுத்திருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனாலும் ஜெயலலிதா [illegible] ஆர்வமாக இருப்பது [illegible] ஏனென்றால், மத்திய அரசை [illegible] கச்சதீவுப் பிரச்சினையை ஒரு ஆயுதமாக பயன்படுத்துவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1974ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க - இந்திரா காந்தி இருவராலும் கையெழுத்திடப்பட்டு எழுதப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தில் மீனவர்களை பாதிக்காத சில விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வருடா வருடம் அத்தீவில் நடைபெற்று வரும் அந்தோனியார் கோவில் உற்சவத்தில் இரு நாட்டு மக்களும் வழமைபோல் கலந்து கொள்ளலாம் என்பதும் - இந்திய மீனவர்கள் கச்சதீவில் தங்கியிருந்து மீன்பிடிக்கலாம் என்பதும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன,

காலப் போக்கில் மீனவர்களின் உரிமைகள் படிப்படியாக இலங்கை அரசால் பறிக்கப்பட்டு நசுக்கப்பட்டன. காலம் காலமாக கச்சதீவுக் கடலில் மீன்பிடித் தொழில் செய்து ஜீவனம் நடத்திவந்த இரு நாட்டு தமிழ் மீனவர்களும் தடுக்கப்பட்டு கச்சதீவு ஒப்பந்தம் இலங்கை அரசால் மீறப்பட்டிருக்கின்றன.

புலிகளை காரணம் காட்டி மீனவர்களை வதை செய்வது அவர்களின் தார்மீக உரிமைகளைப் பறிக்கும் செயலாகும் கடந்த காலங்களில் கடற்படையினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டால் எண்பதுக்கு மேற்பட்ட தமிழ்

**சோமு**

நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், 200க்கு மேற்பட்டவர்கள் காயப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு பொது விதியை இலங்கை கடற்படையினர் மறந்து விடுகிறார்கள். தடை செய்யப்பட்டிருக்கும் கடல் பகுதிகளைத்தாண்டி மீனவர்கள் படகை செலுத்திவரும் போது முதலில் எச்சரிக்கை வேட்டுக்களையே தீர்க்க வேண்டும். அதை விடுத்து நெஞ்சில் சுடுவது பாதகமான செயலாகும். கடற்புலிகளை படையினர் எதிர்பார்த்திருப்பதால் தவறுதலாக இத்துயர சம்பவங்கள் நடப்பதாக இலங்கை அரசு காரணம் சொல்லலாம். ஒன்று இரண்டு சம்பவங்கள் என்றால் இதை ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் நடப்பதோ தொடர் சம்பவங்கள் - தொடர் படுகொலைகள்.

இலங்கை அரசு ஒரு விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். ஈழப் போராட்டம் ஆரம்பித்து - அது ஆயுதப் போராட்டமாக வளர்ச்சியடைந்த இன்று வரை புலிகள் கடற்படைக்கு எதிராக பல தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் இந்திய மீனவர்களைப் போலவோ அல்லது அவர்களின் படகுகளை பயன்படுத்தியோ எந்த விததாக்குதல்களையும் நடத்தவில்லை. இதை கடற்படை அதிகாரிகள் சோர்ந்து செல்லும் சகாக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். கடல் எல்லையை மீறிவரும் மீனவர்களை கைது செய்வதற்கு இலங்கை கடற்படைக்கு தார்மீக பொறுப்பு இருக்கிறது. ஆனால் கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளுவதற்கு சர்வதேச கடல் சட்டங்கள் தொடர்ந்தும் இடங் கொடுக்காது என்பதை இலங்கை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்று தமிழ் நாட்டில் லட்சக்கணக்கான மீனவர்களின் ஜீவனத்திற்கான எரியும் பிரச்சினையாக இது இருப்பதால் அதை எந்த அரசியல் கட்சிகளும் பயன்படுத்தவே நினைப்பார்கள். அதிலும் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளால் அதை தட்டிக்கழிக்க முடியாது. அதற்காக வாதிடுவதற்கும் போராடுவதற்கும் அவர்கள் தயங்கமாட்டார்கள்.

தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதை - காயப்படுத்தப்படுவதை முன்னைய மத்திய அரசாங்கம் போல் இன்றைய அரசு வாய் மூடி மௌனியாக இருக்க முடியாது. டெல்கியில் இருக்கும் மத்திய அரசும் தமிழ் நாட்டு நலனில் அக்கறை காட்டாமலும் இருக்க முடியாது. ஏனென்றால், ஜெயலலிதாவின் கை அரசியலில் ஓங்கியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் கச்சதீவுப் பிரச்சினையை அவர் எடுப்பது தன் கட்சி நலனுக்காக இருந்தாலும் அதில மீனவர்களின் பிரச்சினை என்னும் பொது நலனும் அடங்கியிருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் மறக்கக்கூடாது.

இரு நாடுகளுக்கிடையில் ஏற்படும் - எழுதப்படும் ஒப்பந்தங்கள் கனம் பண்ணப்பட வேண்டும் என்பது ஒரு பொதுவான நியதி. ஆனால் ஒப்பந்தங்களை மீறுவதில் சாதனை படைத்து வரும் இலங்கை அரசுகளின் கடந்த கால வரலாறு உலகறிந்த சங்கதி,

பண்டா செல்வா ஒப்பந்தம் - டட்லி - செல்வா ஒப்பந்தம், கச்சதீவு ஒப்பந்தம், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வான இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்று தொடர்ச்சியாக இலங்கை அரசுகளால் மீறப்பட்டிருப்பதை புதிய இந்திய அரசு புரிந்து கொண்டால் சரி. □

## புதைகுழியில் மனித எலும்புகள் வியட்நாமில் மீட்டெடுப்பு

மத்திய வியட்நாம் பகுதியில் புதைகுழி ஒன்றினுள் 1007க்கும் மேற்பட்ட மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன. 1858 இல் அப்போது வியட்நாமை ஆட்சி செய்த பிரெஞ் காலனித்துவத்துக்கு எதிராக போராடிய வியட்நாமிய போராளிகளின் எலும்புகளே அவை என புதை பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரெஞ் ஆதிக்கத்தை தொடர்ந்து அமெரிக்க ஆதிக்கத்திற்கும் எதிராக வியட்நாம் போராடியது தெரிந்ததே.

# டைட்டானிக்

## ஒரு கப்பல் - ஒரு காதல் - ஒரு சோகம்

சமீபத்தில் பல ஆஸ்கார் விருதுகளை அள்ளிக் குவித்த பிரமாண்ட தயாரிப்பான டைட்டானிக் எனும் ஆங்கிலத் திரைப்படம் இன்று உலகம் முழுவதும் பேசப்படும் ஒரு சாதனையாகக் கருதப்படுகின்றது. தயாரிப்பு செலவிலும் - வசூலிலும் இது வரை வெளிவந்த திரைப்படங்களில் முன்னணியில் நிற்கிறது. இப்படத்தின் இயக்குநர் ஜேம்ஸ் கேமறூன் இந்த நூற்றாண்டின் சிறந்த சாதனையாளர் என்று எத்தனை முறை பாராட்டினாலும் தகும். அப்படிப் பேசப்படும் அளவுக்கு படத்தை இயக்கியிருக்கிறார்.

1912-ம் ஆண்டு உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை பின்னணியாக கொண்டு இப் படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது. கடவுளே நினைத்தாலும் மூழ்கடிக்க முடியாது என்று பேசப்பட்ட இந்தக் கப்பலின் பெயர் தான் டைட்டானிக். இதே ஆண்டு ஏப்ரல் 10-ம் திகதி இங்கிலாந்தில் சௌத்தாம்டன் துறைமுகத்திலிருந்து அட்லாண்டிக் சமுத்திர வழியாக தனது உல்லாசப் பயணத்தை அமெரிக்கா நோக்கி ஆரம்பிப்பதுடன் திரைப்படம் ஆரம்பமாகின்றது.

46,000 தொன் எடையுள்ள பிரமாண்டமான சொகுசுக் கப்பலில் கப்டன் எட்வார்ட் ஸ்மித் உட்பட 841 பணியாளர்களும் - 1316 பயணிகளும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இவர்களில் பணக்காரர்களும் - நடுத்தர வர்க்கத்தினரும் பல அறிஞர்கள் - விஞ்ஞானிகள், இசைக் கலைஞர்களும் உள்ளடங்கியிருந்தார்கள்,

அட்லாண்டிக் சமுத்திரத்தில் டைட்டானிக் சீரான வேகத்தில் - கம்பீரமாக நகர்ந்து கொண்டிருந்தது இலக்கு, நியூயோர்க். முதல் நான்கு நாட்களையும் பயணிகள் பால்ரூம் டான்ஸ் - இசை நிகழ்ச்சிகள் - பிரதான விருந்து - நீச்சல் என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் கழித்தனர். புதிய நட்புகளை துவங்கினர். காதல்கள் மலர்ந்தன நிகழப்போகும் பயங்கரத்தை அறியாது ஒவ்வொருவரும் தங்கள் தகுதிக்கேற்றவாறு புதிய உறவுகளை இறுக்கமாக்கிக் கொள்கின்றனர்.

இந்த இடத்தில் தான் இயக்குநர் ஜேம்ஸ் கேமறூன் இன்னும் மிளிர்கிறார், வெறும் கப்பல் பயணம் என்றில்லாமல் அதற்குள் ஒரு இளம் காதலர்களின் உணர்வுகளையும் இழையோட விட்டிருக்கிறார். தகுதியை மீறிய காதல் தரத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது. காதலர்களின் நெருக்கம் கடைசி வரை காட்டப்பட்டுள்ளது;

கோடீஸ்வர குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண்ணை ஒரு சாமானியன் காதலிப்பது - அந்த கப்பல் முழுவதும் இளம் சிட்டுகளாக மகிழ்ந்து பறந்து திரிவது - இனிமையான இதமான காட்சிகள். உண்மையில் மறக்க முடியாதது. இந்த காதலை தடுப்பதற்கு பெண்ணின் குடும்பத்தினர் எடுக்கும் முயற்சிகள் - அவர்களிடம் இருந்து தப்புவதற்காக அந்த பிரமாண்ட கப்பல் முழுவதும் - ஓடி - ஒளிந்து திரிவது - ஒரு காதல் கதையின் நிகழ்வுகள் மூலம் கப்பலின் உள் அரங்க அமைப்புகளை கண்முன் நிறுத்துகிறார் இயக்குநர் ஜேம்ஸ் கேமறூன்,

இந்த மகிழ்ச்சியான நேரத்தில் தான் அந்த விபரீதம் நிகழ்கின்றது. ஏப்ரல் 14 காலை ரேடியோ மூலம் (அந்த காலச் செய்தித் தொடர்பு கருவி) உங்கள் கப்பல் போகும் வழியில் சில ஐஸ் பாறைகள் தென்படுகின்றன உஷார் என்று தொடர்ந்து செய்திகள் வர, யானையோடு பூனை மோதுவதா; ஐஸ்பாறை இருந்தால் என்ன இந்தக் கப்பலை என்ன செய்து விடும் என்ற ரீதியில் அந்த தகவல்கள் அலட்சியப்படுத்தப்பட்டன. ஆனால் அந்த நாள் இரவு 11 மணி அளவில் பனிப்பாறையுடன் அந்த பிரமாண்ட கப்பல் மோதுகின்றது. மூழ்காது என்று எதிர்பார்க்கப்பட்ட அந்த கப்பலை கூரிய பெரிய ஐஸ்பாறைகள் பக்கவாட்டில் நூறு அடிக்கு வெட்ட கடல்நீர் குபு குபு என்று கப்பலுக்குள் நுழைய ஆரம்பிக்கிறது.

கப்பலின் மாளிகை போன்ற உள் அரங்க அமைப்புகள் கடல்நீரின் வேகத்தால் நொருங்கி அழிக்கப்படுவதும் - அதில் சிக்குண்ட பயணிகளின் மரண ஓலங்களும் - மரணங்களும் பெண்கள் குழந்தைகள் சிறிய படகு மூலம் காப்பாற்றப்படுவதும் மயிர் கூச் செறியும் சம்பவங்கள்,

இந்த களேபரத்திற்கு மத்தியிலும் அந்த காதல் சோடியை புகுத்தி புகுந்து விளையாடியிருக்கிறார் இயக்குநர். காப்பாற்ற கொள்வதில் இருவருக்கும் இடையிலயா விட்டுக் கொடுப்பது என்பதில் ஒரு போட்டியே நடத்தியிருக்கிறார். கடைசியில் தனது அன்புக் காதலியை காப்பாற்றி அவளுக்காக தனது உயிரை விடுகிறான் அந்த வாலிபன். மனதை நெகிழ வைக்கும் காட்சி.

இப் படத்தைப் பற்றி இப்படியே எழுதிக் கொண்டே போகலாம். மொத்தத்தில் இந்த டைட்டானிக் திரைப்படம் பிரமாண்டம் - காதல் - சோகம் என்று எல்லோரும் பார்த்து ரசிக்கும்படியாக எடுத்து சாதனை படைத்திருக்கிறார்கள்.

# சனீஸ்வர மாற்றப் பலாபலன்கள்

## 18 - 04 - 1998 தொடக்கம் 2 1/2 ஆண்டுகளுக்கு

நவக்கிரக நாயகர்களுள் ஈஸ்வரன் பட்டம் பெற்ற விதிநாதன் சனீஸ்வரன் 18-4-98 தொடக்கம் 2½ ஆண்டுகளுக்கு பன்னிரராசிகளுக்கும் கோசரரீதியில் பலாபலன்களை அளிக்கப் போகிறார். 16-8-98 முதல் மேடராசிக்குள் வக்கிரமாகி 31-12-98ல் வக்கிர நிவர்த்தியாகி; பின்னர் 3-8-1999 முதல் வக்கிரமாகி 1-.-2000ல் மேடராசிக்குள்ளே வக்கிர நிவர்த்தியாகின்றார்.

கோசரரீதியில் 1-ம் 2-ம் 12ம் இடங்களில் சனீஸ்வரன் நிற்கின்ற வேளை 7½ச் சனியென்றும்: 4, 7, 10ம் இடங்களில் உலவும்போது கண்டகச் சனியென்றும், 8ல் இருப்பின் அட்டமத்துச்சனி எனவும் 3, 6, 11ம் நிலையில் இருந்து இன்ப சுகங்களை அள்ளித் தருமெனவும், 9ம் இடம பாக்கிய சனி எனவும் 5-ல் சனி நஞ்சுச் சனி எனவும் அழைப்பர்.

### மேடம்

அஸ்வினி, பரணி

கார்த்திகை 1

18-4-98 தொடக்கம் 2½ ஆண்டுகட்கு சனீஸ்வரன் உங்களுக்கு ஜென்மத்தில் நின்று அதாவது கோசரரீதியில முதலாம் இடத்தில் தங்கியிருந்து பலாபலன்களைச் செய்வார் மேடராசியிலசனி நீசனாகிசெவ்வாய் வீட்டில் இருப்பதினால் உங்களுக்கு நடக்கவிருக்கும் புரிவார். அடுத்த 2½ ஆண்டு கட்கு ஜென்ம சனியாக அதாவது சனீஸ்வரன் 1ம் இடத்தில் நின்று அதன் கோசர நிலைக்கேற்ப சோகம், உள உடல் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றார் 7½ச் சனி தொடங்கி 5 ஆண்டுகளுக்கு மட்டுந்தான் துன்ப துயரங்களையும் கஷ்டங்களையும் கொடுப்பார். இறுதி 2½ ஆண்டுகளும் 7½ச் சனி கடைக்கூறாகி நன்மைகளை அதிக

### சோதிடர் V. A. சிவராசா

வேலணை

பலாபலன்கள் நீங்கள் எதிர்பார்க்கின்ற மாதிரி அவ்வளவிற்கு நன்மையானதல்ல. உங்கள் ஜாதகத்தில் மகா தெசாபுத்தி நன்றாக இருந்தால் 7½ச் சனி நற்கூறினால் ஏற்படும் கெட்டபலன்கள் வாழ்க்கையைப் பரிதாபகர நிலைக்கு நிச்சயம் கொண்டு செல்லாதெனலாம்.

### இடபம்

கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2.

உங்களுக்கு 18.4.98 தொடக்கம 7½ச்சனி 71/2 ஆண்டுகளுக்கு நடைபெறப் போகின்றது முதல 2½ ஆண்டுகளுக்கு சுக சுபச் செலவினை ஏற்படுத்தும் முகமாக சனீஸ்வரன் கோசர ரீதியில் 12 ஆம் நிலையில இருந்து பலன்களைப் மும் தீமைகளைக் குறைவாகவும் கொடுப்பார். இடபராசிக்கு சனீஸ்வரன் நட்பு பூண்டிருப்பதினால் 71/2ச் சனி நன்மையே புரிவார்.

### மிதுனம்

மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3

மிதுனராசிக்கு சனீஸ்வரன் கோசர ரீதியில் 11ம நிலையில் நின்று கொண்டு 18-4-98 தொடக்கம் 2½ ஆண்டுகளுக்கு நன்மையான பலபலன்களையே அள்ளித் தரப் போகின்றார் உங்கள் ஜாதகத்தில் சனீஸ்வரன் தீயபலன்கள் அளிக்கின்ற ஸ்தானத்தில் நின்றாலும் நடக்கின்ற மகாதெசா புத்தி கெட்டதாக இருந்தாலும் சனீஸ்வரன் கொடுக்கப் போகும் நன்மைகள் குறைவாகக் காணப்படும் அடுத்த சனி மாற்றம் உங்களுக்கு ஏழரைச் சனியின் ஆரம்பமாகும். வெளியூர் பயணம் கைகூடும். இழுபட்ட திருமணம் முதலான விடயங்கள் திடமான ஒப்பேறும். நோய்கள் குணமடையும். பிதா மற்றும் மூத்த சகோதரங்களின் உதவியும் ஒத்தாசையும் பொருத்த கட்டத்தில கிடைக்கும் நடடதில் இயங்கியவை லாபத்தை அள்ளிச் சொரியும் மூடப்பட்டவை மீண்டும் திறக்கப்படும் வாகன யோக முண்டு. காதல் கர்ப்பம் முதலியன ஏற்படும். பரீட்சை முடிவுகள் தித்திக்கும்.

(மிகுதி அடுத்த வாரம்)

---

### மரத்தின்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது அந்த மோசடிக் காரனின் காதில் விழுந்தது. 'இந்நேரம் பாதி தூரம் கூடப் போயிருக்க முடியாது. அதற்குள் எப்படி அவர் திரும்பி வருவார்' என்று மோசடிக் காரன் தன்னை யறியாமலேயே சொன்னான்.

சற்று நேரம் கழித்து அந்த முதியவர் வருத்தத்துடன் 'திரும்பி வந்தார். பீர்பாலிடம், நீங்கள் சொன்ன மாதிரி அந்த மரத்திடம் சொல்லிப் பார்த்தேன் அது ஒன்றுமே பேசவில்லை' என்று கூறினார்.

இதைக் கேட்ட பீர்பால் அந்த மரம் நீங்கள் அங்கு போவதற்கு முன்னாலேயே சாட்சி சொல்லி விட்டதே! என்று கூறி மோசடிக் காரனைப் பார்த்து, உண்மையை நீயாக ஒப்புக்கொள்ள விட்டால் உனக்கு கடும் தண்டனை கிடைக்கும். இந்த முதியவர் செல்ல வேண்டிய தூரம் வெகு தூரத்தில் உள்ளது என்பது உனக்கு எப்படித் தெரியும் என்று அந்த மோசடிக்காரனைப் பார்த்து மிரட்டினார்.

மோசடிக்காரன் உண்மையைக் ஒப்புக் கொண்டு பண முடிப்பைக் கொண்டு வந்து முதியவரிடம் கொடுத்து விட்டான்.

முதியவர் பீர்பாலை வாழ்த்திச் சென்றார் அடுத்தவர் சொத்தை அபகரிக்க நினைப்பது பாதகமான செயல்! □

---

### சிறுவர்கள்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது. குடும்பங்கள் பிரிக்கப்படுகின்றன. சமூகங்கள் சிதறடிக்கப்படுகிறது. சுகாதார, கல்விச் சேவைகளைச் சீர்குலைக்கிறது.

யுத்த காலங்களில் பிள்ளைகள் மன அதிர்ச்சி தரும் நிகழ்வுகளை அல்லது ஏனைய சம்பவங்களை அவர்கள் அனுபவிக்கும் போது தங்கள் குடும்பங்களில் இருந்து தாங்கள் பிரிக்கப்பட்டு விடலாம் என்ற துயருடன் கலந்த கவலை அதிகரிப்பினால் துன்புறலாம்.

பிள்ளைகளைப் பேணுவதற்கும், பாதுகாப்பிற்கும் குடும்பம் அவசியமாகும். அது பிள்ளையின் விருத்தியில், ஒரு முக்கிய சமூக பொருளாதார பண்பாட்டுக் காரணியாக விளங்குகிறது. ஆயினும் உடல் ரீதியான உணர்வு ரீதியான மோதல்களினால் குடும்பங்கள் அநேகமாகத் தேய்ந்து போகின்றன, அதிக வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றன. பிள்ளைகளது வாழ்வின் மீட்சிக்கு உரிய அதி செம்மையான நீடித்த அணுகு வழி தற்போதுள்ள சமூக பேணல் அமைப்பைக் கட்டி எழும்புதலேயாகும்.

துரதிட்டவசமாக, ஆயுத மோதலின் போது பாடசாலைகள் தானும் தாக்குதலிலிருந்து காக்கப்படுவதில்லை என்பது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில்; ஆயுத மோதலின போது அச்சமும், குழப்பமும் படிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தற்கு இடையூறாக இருப்பதோடு ஆசிரியர்கள் மாணவர்களது மனவுறுதியும் தாழ்வானதாகவும் இருக்கக்கூடும். மோதல்கள் மாதக் கணக்கில் அல்லது வருடக் கணக்கில இழுபட்டுக் கொண்டு போகும் போது பொருளாதார சமூக நிலைமைகளும பாதிக்கப்படுவதோடு கல்வி வாய்ப்புக்களும் மட்டுமட்டாகும் அலலது அறவே இல்லாது கூடப் போகக் கூடும்.

சில சமயங்களில் யுத்தப் பாதிப்புள்ள பகுதிகளில் கல்வி வாய்ப்புகள் இருந்தும் கூட பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத் தயங்கக் கூடும். பிள்ளைகள் பாடசாலைக்குப் போய் வரும் போது அலலது வகுப்பறையில் இருக்கும் போது அவர்களுக்குப் பாதுகாப்பில்லை எனப் பெற்றோர் பயப்படக்கூடும். தாய்மாரும், தந்தைமாரும் தங்கள் பிள்ளைகள் வயலகளிலோ கடைகளில் அல்லது வீடுகளில் இருக்கும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனப் பெற்றோர் பயப்படக் கூடும்.

ஒரு பிள்ளை உயிர்வாழ்தலுக்கும், வளர்வதற்கும் அவசியமான குடும்ப உதவி அமைப்புக்கள், யுத்தத்துக்கு முன்னர் அலலது யுத்தம் நடைபெறும் போது அநேகமாக நிகழும் துரித சமூக மாற்றங்களினல் துண்டிக்கப்படுகின்றன மற்றும் வகையான பாதுகாப்பும், குறிப்பாக அரசினாலும் சமூகத்தினாலும் தரப்படும் உதவி ஏற்பாடுகளும் வழுவிப் போய் விடுகின்றன. □

---

### உருமறைப்பு

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறதுக்கே பெரும்பாடு — உந்தப்பாழ்பட்ட அரசாங்கம் ஒழுங்கா அனுப்பினாத் தானே? இந்த நிலைமையில; மாப்பிள்ளையும் பாரெண்ட முடியுமா? அதுதான் தள்ளித் தள்ளிக்கொண்டு போறன். ஏதோ ... பெரிசா ... ஆங்... பெரிசா நினைச்சுப் போடாதேங்கோ!"

தாண்டி வந்தோம். அம்பாள் குறுக்கே பாய்ந்தாள். எத்தனை நேரமாய்த் தெரு வாசலிற் காத்துக் கிடந்தாளென்று புரிந்தது. "தம்பி, சவூதியெண்டாத் தெரியுந் தானே? நல்ல சம்பளமெண்டு பேர் தான் எங்கட காசுக் கெல்லோ? எடுக்கிறதெல்லாம் அங்கேயே செலவழிக்கத் தான் சரி? எப்பவேன் நாலோ அஞ்சோ வரும் அவ்வளவு தான் வந்புறுத்தேலுமே? பிள்ளையள் சிற்றிசன் ஆனவே -அவேன்ர பாடு ஒரு கடிதத் துண்டு இல்லை. அப்போதே இந்த மனிசி புளுகிச்சுதே எண்டு வித்தியாசமா நினையாதேங்கோ! கலியாணமெண்டு வந்தா ஆங் கூட்டிக் குறைக்கிறது உலக வழக்கந் தானே? என்ன தம்பி விளங்கிக் கொண்டியளோ? பெரிசா .."

எங்களுக்கென்ன? எல்லாம் என்னத்துக்கு? வந்தது விருந்துக்கு; முடிஞ்சுது; திருமபிட்டம்.

கையொழுங்கைகள் - ஆங்காங்கு குருட்டொழுங்கைகள். கிளைத்தெரு, முதன்மைத் தெருவில் ஏறினோம். □

---

### யாழ். போதனா

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றார் அவ்வதிகாரி இது அவர்களின் குற்றச் சாட்டுக்கு நேர் எதிரானது.

மருத்துவச் சான்றிதழை எமது ஆஸ்பத்திரியில் எடுப்பதை விடுத்து, வேறு ஆஸ்பத்திரியில் எடுத்து வருகிறார்கள், இது ஏற்புடையதல்ல. (அரசாங்க ஊழியர்கள் எடுக்கும் சுகவீன லீவுகளுக்காக கொடுக்கப்படும மருத்துவச் சான்றிதழ்களின் நம்பகத்தன்மை ஊரறிந்த இரகசியம் தானே) இதே போல் லீவு எடுப்பதற்கு முன்னர் அது குறித்து அறிவிக்க வேண்டுமே இது குறித்த ஒழுங்கு முறை நூல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் மேற்பார்வையாளர்கள் லஞ்சம் வாங்குவது பற்றி குறிப்பிடுகிறார்கள். ஆனால் இது குறித்து எந்த விதமான எழுத்து முறைப்பாடு மூலம் எதுவும் பணிப்பாளருக்கு தெரிவிக்கவில்லை. மாறாக மகப் பேற்று வாட்டில் நோயாளர்களிடம் கை லஞ்சம் வாங்கி குற்றபபட்ட சுத்தகரிபபுத் தொழிலாளர்களே இப்போது சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பணிப்பாளர் தொடக்கம் சுத்திகரிப்புத் தொழிலாளி வரை பணியாற்ற வேண்டியது நோயாளியினரைக் குணப்படுத்தவே, நிருவாக மோதலினால் பாதிக்கப் படப் போவது நோயாளர்களே. இந்நிலைமை வரவேற்கத் தக்கது அல்ல என்றார் பிரச்சினையை அறிந்து கொண்ட நோயாளி ஒருவர்.

மேலும், சுத்திகரிப்புத்தொழிலில் குறிப்பிட்ட நபர்கள் மட்டும் கல்வித்தகைமை மற்றும் தனிமனித ஆளுமை ஆகியவற்றைக் காரணம் காட்டி தொடர்ந்தும அவர்கள் சுத்திகரிப்பு வேலையை செய்யும் படி கட்டளையிட முடியாது. அவர்களுடைய கல்வித் தகைமை மற்றும் தனிமனித ஆளுமை யாவும் அதிகாரிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று பார்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். ஆஸ்பத்திரி நிர்வாகம் இவர்களது ஆளுமையை வளர்த்துக்கொள்ளவு வேலை செய்யவும் திறமையை வளர்த்துக்கொள்ளவும் உரிய பயிற்சிப் பட்டறைகளை நடாத்த வேண்டும் என்கிறார் முன்னைநாள் வைத்தியசாலை நலன்புரி சங்க ஊழியர் ஒருவர்.

நிலைமை எப்படி இருப்பினும், அடிமட்டத்தொழிலாளர்கள் எவ்வகையிலும் அதிகாரிகளால் புறம்தொதுக்கப்படக் கூடாது. அதே போல் அடிமட்டத் தொழிலாளர்களும் "நிருவாகத்தினருடன் உரிய முறையில் தமது பிரச்சினைகளை பகிர வருதலில் தான் பிரச்சினைக்கு தீர்வு பிறப்பிக்கும் எனறார் வைத்திய சாலையில் பணி புரியும் இளம் டாக்டர் ஒருவர். குறிப்பிட்ட பிரச்சினை குறித்து எமது பத்திரிகையாளரிற்கு பேட்டி அளித்தமைக்காக சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பேச்சாளர் கந்தசாமி அவர்களுக்கு விளக்கம் கோரும் கடிதம் (Explanation Letter) நிருவாகத்திடம் இருந்து வந்துள்ளதாகவும் அறிய வருகின்றது. □

# காலைக்கதிர்

தபாற்பெட்டி எண் : 145, யாழ்ப்பாணம்.

ஒளி : 01 17 - 04 - 1998 கதிர் : 07


## அரசியல் தீர்வே தேவை

"சிதறிப் போன தேசத்தை மீண்டும் ஒன்றுபடுத்திப் போருக்கு முடிவு கட்டுவோம்" சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியின் தொனிப் பொருள் இது.

போர் முடிவின்றி நீடித்துக் கொண்டிருப்பதும், உயிரிழப்புக்கள் தொடர்கதையாகிக் கொண்டிருப்பதும் அமைதி சமாதானம் என்பவற்றை நாடும் மக்களுக்கு உடன்பாடானதாக இருக்காது.

இன்று வரை நீடித்துக் கொண்டிருக்கும் போருக்கு யார் காரணம் என்பதை ஆராயப் புகுவது நதி மூலம், ரிஷி மூலம் தேடிக் கொண்டிருப்பதற்கு ஒப்பானதாகும். எனினும் 'போர் என்றால் போர்' என்று சவால் விட்டதும், ஆறாவது திருத்தச் சட்டத்தையும் அமுலாக்கி மிதவாத சக்திகள் அரசியலரங்கிலிருந்து அகற்றப் பட்டதும், இனப் பிரச்சினை என்பது இன ஒழிப்பு என்ற கட்டத்தை தொட்டு நின்றதும் தமிழ் மக்களின் மனங்களிலிருந்து இலகுவில் நீக்கப்படக் கூடிய விடயங்களல்ல.

எனவே தான் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமேயானால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டாக வேண்டும் என்பது முதன்மையானதும், முக்கியமானதொரு நிலைப்பாடாக கொள்ளப்பட வேண்டும்.

எனினும் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதுமானதும் - தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியதுமான அரசியல் தீர்வு எதுவும் இதுவரை திட்டவட்டமாக தெளிவாக முன் வைக்கப்பட்டு விடவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்தியாவின் நேரடித் தலையீட்டால் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபை கூட ஸ்தம்பித நிலையை அடைந்து எட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டது.

1994-ல் தென்னிலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத் தரலாம் என்ற நம்பிக்கையும் கூட மெலிந்து கொண்டு தான் போகின்றது.

எனவே தான் இராணுவ முனைப்புக்களையும், போரைத் தீவிரமாக்குவதையும் தவிர்த்து அரசியல் தீர்வுக்கான முன் முயற்சிகள் முடுக்கி விடப்பட வேண்டும் என்பது காலத்தின் தேவையாகின்றது.

இங்கிலாந்தும் - வட அயர்லாந்தும் காட்டியுள்ள முன் உதாரணம் இவ்வகையில் உற்று நோக்கப்பட வேண்டியதாகும். பல கட்சி மாநாட்டில் அண்மையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் மூலம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவிய ரத்தக்களரியும், போரும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனநாயக ரீதியில் செயற்படும் மிதவாத சக்திகளுடன் உடன்பாடுகள் எட்டுவது என்பது அரசியல் தீர்வு தேடும் முயற்சிக்கு முதற்படியாக அமையலாம் என்பதற்கு அயர்லாந்து ஒரு பாடம்.

சிறிலங்கா அரசாங்கம் போதிய துணிவுடனும், தூரப்பார்வையுடனும் நேர்மையுடனும் செயற்பட முடியுமானால் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளில் முன்னேற முடியும். நிலையான - நீடித்திருக்கக் கூடிய அரசியல் தீர்வு முன் வைக்கப்பட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளும் நிலை தோன்றினால் போர் முடிவுக்கு வருவதை எதிர்பார்க்கலாம்...

# நகரமத்தியில் வெடித்த குண்டு எதிரொலித்த செய்தி என்ன?

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பாலச்சந்திரன் கமலாசினி என்பவர் புத்தாண்டை குதூகலமாக வரவேற்க வேண்டும் என்று தான் எண்ணம் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளுக்குப் புத்தாடை அணிந்து பார்க்க வேண்டும் என்று தான் அவாவுற்றிருக்க வேண்டும். ஆனால் அவருக்கு அது கிடைக்கவில்லை. 'எங்களை அம்மாவை எங்களோடை வீட்டுக்கு அனுப்புங்கோ மாமா', என்று வைத்தியசாலை வாசலில் வைத்து அவரது மூன்று குழந்தைகளும் கண்ணீர் விட்டுக் கதறியதைக் கண்ட எவரும் மனமுருகாது இருக்க முடியாது.

கடந்த ஞாயிறன்று பிற்பகல் 5.40 மணியளவில் யாழ்ப்பாண நகரில் மையப்பகுதியில் கேட்ட சத்தம் பாலச்சந்திரன் கமலாசினியின் உயிரைப் பறித்துக் கொண்டு போனது துரதிட்டமானது. திடீரென சத்தம் கேட்டது. புத்தாண்டை வரவேற்பதற்கான கொள்வனவுகளில் ஈடுபட்டிருந்த மக்களால் நகரப்பகுதியெங்கும் நெரிசல் சற்று அதிகமாகவே அப்போது இருந்தது. மின்சார நிலைய வீதியில் காங்கேசன்துறை வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையே இந்தக் கிரனேட் குண்டு எப்படி வந்தது என்பது சற்று ஆச்சரியமானது தான்!

பாதுகாப்பு படையினர் கொண்டு வந்திருந்த கைக்குண்டுகளில் ஏதாவது தற்செயலாக - தவறுதலாக வெடித்திருந்தால் அதனைக் கொண்டு வந்திருந்தவர் உட்பட சிலர் காயமடைந்திருக்க வேண்டும். ஆனால் பி.பி.சிக்கு தகவலளித்த யாழ் நகரச் செய்தியாளரின் கூற்றுப்படி சம்பவம் நடைபெற்ற போது படையினர் எவரும் அப்பகுதியில் காணப்படவில்லை என்பதுடன் படையினர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து விடவில்லை, பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள காவல் நிலைகளிலிருந்த படையினரோ, கஸ்தூரியார் வீதி ஸ்ரான்லி சந்தியிலிருந்த படையினரோ சத்தம் கேட்டவுடன் பதற்றமடைந்து ஸ்தலத்தை நோக்கி விரைந்து விடவில்லை. கைக்குண்டு வெடித்ததும் சிதறி காயமடைந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடியதும், கடைக்காரர்கள் கடைகளை மூடுவதா? இல்லையா? என்பது பற்றி உடன் முடிவு எடுக்க முடியாமல் அவதிப்பட்டதும் நீண்ட நேரம் நீடித்து விடவில்லை. ஒரு சில மணி நேரங்களுக்குள் அனைத்தும் வழமை நிலைமைக்கு திரும்பி விட்டமை கண் கூடு.

'மிக உயரத்திலிருந்து கிரனேட் போன்ற பொருளொன்று நிலத்தை நோக்கி வருவதனைக் கண்டேன். சில யார் தூரத்தில் அப்பொருள் வீழ்ந்து வெடித்தது. அப்போது அப்பகுதியில் ஒரு புகை மூட்டம் காணப்பட்டது, இவ்வாறு விபரிக்கிறார் இச்சம்பவத்தில் காயமடைந்த திருமதி புஸ்பமலர் ரமேஸ், 28 வயதான இவர் எட்டு மாதக்கர்ப்பிணி. கணவருடன் புதுவருடக் கொள்வனவுக்காக வந்திருந்த போது இடம் பெற்ற இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் நெற்றி, கைகள், கால், வயிறு என்பவற்றில் காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவத்தினால் இவரது வயிற்றிலிருந்த குழந்தையின் உயிரும் காவு கொள்ளப்பட்டு விட்டது. உயிரிழந்துள்ள நிலையிலும் சிசுவைச் சுமந்த படி காணப்படும் அவரது பரிதாபநிலைமை கவலையை வரவழைப்பதாகும். சத்திரசிகிச்சை மூலம் சிசுவை வெளியெடுக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண இயல்பு நிலை மக்கள் கருத்து வேறானதாம்

### பி.பி.சியின் தமிழோசையில் கருத்து

யாழ்ப்பாணத்தில் ஒரு இயல்பு நிலை இருப்பது போல வெளியிலிருந்து செல்பவர்களுக்குத் தெரியலாம் ஆனால் யாழ்ப்பாண மக்கள் வேறு விதமான கருத்தையே கொண்டுள்ளனர் போல தெரிகிறது. இவ்வாறு பி.பி.சியின் தமிழோசையில் தெரிவிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த லயன் ஷெப்பர்ட் என்பவர் இங்குள்ள பலதரப்பட்டவர்களையும் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டிருந்தார். தங்களைத் தனிப்பட்ட முறையில் இனங்காட்ட விரும்பாமல் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பி.பி.சியின் தமிழோசையில் கடந்த 13-ம் திகதி ஒலிபரப்பானது.

அதில் ஒருவர் குறிப்பிடுகையில், பல ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளது என்றே கூற வேண்டும் உணவுப் பொருட்களும், வீட்டு உபயோகப் பொருட்களும், கடைகளில் தாராளமாகக் கிடைக்கின்றன. மின் விநியோகம் ஓரளவுக்கு உண்டு. தொலைத் தொடர்பு வசதிகளும் ஏற்பட்டுள்ளன என விபரித்தார்.

மற்றுமொருவர் குறிப்பிடுகையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு பின்னர் எந்த மாற்றமும் இருப்பதாக இல்லை, எந்தவித முன்னேற்றத்தையோ, அபிவிருத்தியையோ காண முடியவில்லை, சைக்கிளில் ஏறி இறங்கிச் செல்லும் நிலைமை தான் தொடர்கிறது, தேர்தல் வந்து முடிந்து இங்கு நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை. எனத் தெரிவித்தார்,

தேர்தல் மூலம் தெரிவான உறுப்பினர்கள் பாதுகாப்பு நிலைமை தொடர்பான சில நிர்வாக மாற்றங்களை மேற்கொள்வது வரவேற்கக் கூடியதாக இருக்கும் என்று குறிப்பிட்டார் இன்னுமொருவர்.

'பாதுகாப்பு' என்று சொல்லும் போது யாருக்கு யார் பாதுகாப்பு என்ற பிரச்சினை இராணுவத்தினர் தமக்குப் பாதுகாப்பு தேடுவதில் கவனமாக இருக்குமளவுக்கு மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இல்லை என்று தெரிவித்தார் இன்னுமொருவர்.

'சுதந்திரமாக நடமாடுவதற்குப் பயமாக உள்ளது. எந்த நேரத்திலும் இரு தரப்பினருக்குமிடையேயான மோதலில் சிக்குண்டு போவோமோ என்ற பதற்றம். எல்லோரையும் தீவிரவாதிகள் போலவே படையினர் நடத்துகின்றனர். தீவிரவாதிகளையும், பொது மக்களையும் படையினர் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை இதனால் பொது மக்கள் தான் சிரமப்பட வேண்டியுள்ளது'' என்றார் மற்றுமொருவர்.

"மீளக் குடியமர்வின் பின் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் கடந்த இரு வருடங்களாகச் செயற்பட்டு வருகின்ற போதும், இன்னமும் புனருத்தாரண வேலைகள் முற்றுப் பெறவில்லை. விஞ்ஞான பீடத்திற்கு தேவையான ஆய்வு கூட உபகரணங்களை முழுமையாகப் பெற முடியவில்லை. மருத்துவ பீடத்துக்கு போதிய விரிவுரையாளர்கள் வந்து சேரவில்லை.' இவ்வாறு இல்லைகளின் பட்டியல் நீளமானது என்கிறார் பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்.

ஆக மொத்தத்தில் கொழும்பு அரசாங்கத்துடனான அரசியல் பொருளாதாரத் தொடர்புகளை ஒட்டு மொத்தமாகத் துண்டித்து வடபகுதி மக்கள், தனித்தியங்க முடியாது என்பதுவே மக்களின் குரலாக ஒலிக்கிறது எனலாம்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 112 தொண்டர் ஆசிரியர் தெரிவு

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட 112 தொண்டர் ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த [illegible] நடைபெற்று வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் மத்தியில் இருந்து இத் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி 5-16 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சுமார் 4000 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள் உறுதுணையுடன் கல்வி விழிப் புணர்வு வாரம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதன்போது தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் - மதிப்பீடு போன்றவற்றை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1521 ஆசிரியர் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது சுட்டிக்காட்டத்தக்கது.

## இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் இந்திய அரசிடம் சில கோரிக்கைகளை முன் வைப்பதாக அறிகிறேன் இந்த அமைப்புகளுக்குப் பின்னால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தான் செயற்படுவதாகத் தெரிகிறது இத்தகைய அமைப்புகளின் பின்னணியைத் தெரிந்து கொண்டால் இந்திய அரசாங்கமோ, பிரதமரோ இந்தக் கோரிக்கைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள் எனவே நம்புகிறேன் எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடனான உறவு குறித்த கேள்வியொன்றுக்கு பதிலளித்த அமைச்சர் கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவுடனான உறவு நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

## நடப்பு

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் குறிப்பிடுகையில் ஐ.நா. சாசனத்தின் புதிய ஏற்பாடுகளின்படி பிரிட்டன் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும். புலிகளின் நடவடிக்கைகள் பற்றி இலங்கை முறையிடும்போதெல்லாம் பிரிட்டிஷ் சட்டத்தை மீறும் அல்லது வட அயர்லாந்து கிளர்ச்சியுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியுமெனப் பிரிட்டன் கூறி வருவதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

## சட்டமா

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறை, மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய நீதிமன்றங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை பார்வையிட உள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஒன்றை திறக்கவுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

## நகர மத்தியில

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதளவுக்கு பலவீனமானது அவரது உடல் நிலை எனத் தெரிவிக்கின்றனர் வைத்திய நிபுணர்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் நான் நிகற திசையிலிருந்து மேற்குப்பக்கமாவே இக்கைக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் எனக்கருதுகின்றேன். இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்த நிலையில் வெற்றிலைக் கடைப் பக்கமாக ஓடி ஆஸ்பத்திரி வீதியை அடைந்தேன். அங்கிருந்து சிலரின் உதவியுடன் இங்கு கொண்டு வரப்பட்டேன் என்கிறார்.

இச் சம்பவத்தில் காயமடைந்தவரான யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்த ஜீந்தா என்ற இளம் பெண் 'வழக்கத்தை விடசனக்கூட்டம் அதிகமாக இருந்தது. கைக்குண்டு வெடிப்பையடுத்து அழுகைக் குரல்களும், மரண ஓலங்களும் தான் அப்பகுதியெங்கும் நிறைந்தது. அவ் இடத்தை விட்டு விரைவாக நகர்ந்தேன்' என்கிறார்

இந்தச் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பது இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. எனினும் இது தற்செயலாக இடம்பெற்றதாகவோ தவறுதலாக நடந்ததாகவோ தெரியவில்லை. இயல்பான நிலையும், அமைதியான சூழலும், பயமும் பதற்றமும் இல்லாத வாழ்க்கையும் பொதுமக்களுக்கு இன்னமும் வாய்த்து விடவில்லை என்பதையே புதுவருடத்திற்கு முந்திய கைக்குண்டு வெடிப்பின் சத்தம் உலகெங்கும் எதிரொலித்திருக்கும் எனலாம்.

## ரூபவாஹினியில் மண்டையன்

பூச்சியம் கலை வட்டத்தினர் அளிக்கும் மண்டையன் தொலைக்காட்சி நாடகம் எதிர்வரும் செவ்வாய் இரவு ஏழு மணிக்கு ரூபவாகினியில் ஒளிபரப்பப்படவுள்ளது.

சமூக அங்கங்களினால் நிராகரிக்கப்பட்ட ஒருவனின் கதையாக விரியும் படைப்பில் பாத்திரங்களின் ஏற்கும் கூட பரீட்சார்த்தமாக முயற்சிக்கப்பட்டுள்ளது

நாம முரண்படுகின்ற விடயங்களில கூட எவ்வளவு தூரம் சமரசம் செய்து கொள்கின்றோம் என்பதை எடுத்து விளக்குவதாக ரூபவாகினியின் தமிழ்ப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது

## வடமராட்சி

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராம் திகதி முதல் அமுல் படுத்தப்படுகிறது எனவும். வடமராட்சி கிழக்குப்பகுதியில் செயற்படும் பேக்கரிகளை மூடிவிடுமாறு படையினர் உத்தரவிட்டுள்ளனர் எனவும், பெருமளவில் கோதுமை மாவு எடுத்துச் செல்லப்படுவது கூட தடுக்கப்படுகிறது எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. வல்லிபுரக்கோவில் பகுதியிலுள்ள சோதனைச்சாவடியில் அமுல்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

குறைவான கட்டணத்தில்
தெளிவாக
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
உள்ள உங்கள் உறவுகளுடன்
தொடர்பு கொள்ள

யாழ் நகரில
நீங்கள் நாட வேண்டிய இடம்

**தம்பி தொலைத்தொடர்பு சேவை**

90 கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
(சாந்தி தியேட்டர் முன்பாக)

தொலைபேசி இலக்கம் : 2504, 2040

தம்பியின இலலம
நம்பிக்கையின் சின்னம்

## பெருமளவு நிதி செலவீடு படை தளபதி மீது குற்றச்சாட்டு

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ரொகான் தளுவத்தவின் உத்தியோக பூர்வ இல்லம், ஓய்வு நேர விடுதி உட்படவேறு இடங்களுகம் மீள அமைப்புச் செய்யப்பட்ட வகையில் பெருமளவு நிதி செலவிடப்பட்டிருப்பதாக ராவய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்படாமல் 35,68,809 ரூபா பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றிற்கான கொடுப்பனவு விஷேட அவசரக்கொள்வனவு என்பதற்கமைய கொடுக்கப்பட்டதாகவும் கணக்காய்வு திணைக்களம் கண்டு பிடித்துள்ளதாம்.

மேற்படி கணக்காய்வின் படி இராணுவத் தளபதியின் கண்டியில் உள்ள ஓய்வு விடுதிக்கு 3,96,070 ரூபா பெறுமதியான வீட்டு உபயோகப் பொருட்கள் உத்தியோக பூர்வ இல்லத்திருத்தத்திற்காக 1,53,197 ரூபாவும் செலவிடப்பட்டிருப்பதாக தெரியவருகிறதாம்.

## புலிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் இரு தரப்பு உறவுகள் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. எனவும் குறிப்பிட்டார். அமெரிக்க ஜனாதிபதியின் நட்புறவுக் கடிதமொன்றும் சிறீ லங்கா ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ளவர்களின் நலனைக்கவனிக்க அமெரிக்கா மேலதிகமாக பதின்மூன்று லட்சம் டாலர்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார் இலங்கையில் செயற்படும் ஐ.நா முகவர் நிலையங்களுக்கு ஆகக்கூடிய நிதியுதவியை அமெரிக்காவே வழங்கி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்,

இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட தென்கிழக்காசிய விவகாரங்களுக்கும் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளர் கார்ள் இன்டர்பேர்த் குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் எனவும். விடுதலைப் புலிகள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

☐ புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகளுக்கு
☐ அசல் 22 கரட் தங்க நகைகள் உடனே பெற்றிட
☐ வண்ண நகையுகந்து வளமார் நகைகள் எண்ணம் போல் தெரிவு செய்திட
☐ பழைய நகைகள் கூடுதலான பெறுமதிக்கு விற்றிட யாழ் நகரில் தரமான ஸ்தாபனம்

**சாரங்கா நகை மாடம்**
177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அருள் முருகன் நகையகம்**
96/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (தலைமையகம்)

**சிவா நகை மடம்**
கண்டி வீதி, சாவகச்சேரி
(கிளையகம்)

இப் பத்திரிகை காலைக்கதிர் நிறுவனத்தின் சார்பாக ப. [illegible] 1998 ஏப்ரல் 17 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது.
அச்சுப் பதிவு: முத்தமிழ் அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.